# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி 15 வியாழக்கிழமை (01-10-1998) UTHAYAN- A Lively National Tamil Daily சுடர்:263


# மாங்குளம் நகரை கைப்பற்றியதாக அரச தரப்பினர் நேற்று அறிவிப்பு

## ...ண்டை தொடர்வதை புலிகள் ஊர்ஜிதம் செய்தனர்

கொழும்பு, ஒக். 1

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினர் ...டுஞ் சண்டையின் பின்னர் நேற்றுக் காலை 9-00 மணிக்கு ...ாங்குளம் நகரைக் கைப்பற்றியதாக அரசாங்கம் அறிவித் ...ள்ளது.

விடுதலைப் புலிகளின் முக்கிய தளமாக விளங்கிய ...ங்குளம் நகர் நேற்று முன் தினம் ஆரம்பித்த கடுஞ் ...ண்டையின் பின்னர் நேற்றுப் படையினர் வசமானது ...ன்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

''மாங்குளம் நகரை இராணுவம் கைப்பற்றுவதைத் தடுப்பதற்காக விடுதலைப் புலிகள் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். காப்பரண்கள், விசேட பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டிருந்தன என்று அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

''இவை அனைத்தையும் அழித்து நகரைக் கைப்பற்ற திட்டமிட்டபடி பாதுகாப்புப் படையினர் செயற்பட்டிருக்கின்றனர். அவர்கள் தொடர்ந்து முன்னேறிச் செல்வதுடன் தமது நிலைகளைப் பலப்படுத்தி வருகின்றனர் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இளைஞன் மரணம்

வவுனியா மாவட்டத்தில் சமணங்குளம் பகுதியில் நேற்று மாலை 6 மணியளவில் விடுதலைப் புலி உறுப்பினர் என நம்பப்படும் ஒருவர் ''சயனைட்'' உட்கொண்டு மரணமானதாக புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

சமணங்குளம் பகுதியில் சந்தேக நபர் ஒருவர் நடமாடுவதாக தகவல் கிடைத்ததையடுத்து அவரைக் கைது செய்ய புளொட் முயன்ற சமயம் அவர் சயனைட் அருந்தி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலம் வவுனியா ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது. (இ-3-164)

# செஞ்சிலுவைக் குழு அதிகாரிகளிடம் 600 சடலங்கள் நேற்று ஒப்படைப்பு!

## மல்லாவியில் சம்பவம்

கொழும்பு, ஒக்டோபர் 1

கிளிநொச்சி, பரந்தன் பாதுகாப்பு நிலை...கள் மீது தாம் மேற்கொண்ட தாக்குதலின் ...போது கைப்பற்றிய படையினரின் சடலங்கள் ...னத் தெரிவித்து 600 சடலங்களை நேற்றுக் ...காலை 9.30 மணிக்கு மல்லாவியில் வைத்து ...விடுதலைப் புலிகள் செஞ்சிலுவை சர்வதேசக் ...குழு அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

...செஞ்சிலுவைச் சர்வதேசக் ...ழு யாழ். அலுவலக அதிகாரி ...ர பெர்றாண்ட் இதனை ...ர்ஜிதம் செய்தார்.

...படையினரின் சடலங்கள் செஞ்சிலுவை சர்வதேசக்குழுவிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டதை அரச வெகுஜன தொடர்பு சாதனங்களும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ...00க்கு மேல் பலி என படைத்தரப்பு தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 1

பரந்தன், கிளிநொச்சி பகுதிகளில் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் இடம்பெற்ற சண்டையில் 400க்கு மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர் என்று பலாலி இராணுவ தலைமையகச்செய்திக் குறிப்பு தெரிவித்தது.

நேற்று இரவு விடுக்கப்பட்ட அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த சண்டையில் 400க்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் கிட்டத்தட்ட 377 பேர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் பலியான மேலும் 38 பேரின் விவரம்

யாழ்ப்பாணம், ஒக் 1

கிளிநொச்சியில்இடம்பெற்ற தாக்குதலில் மரணமான மேலும் 38 பேரின் விவரங்களை விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

ஏற்கனவே 57 பேரின் விவரங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

38 பேரின் விவரங்கள் வருமாறு:-

★ மணிவண்ணன் (கணபதிப்பிள்ளை இளங்கேஸ்வரன் — மட்டக்களப்பு)

★ பாலசிங்கம் (குஞ்சுத்தம்பி பிரசாத் —அம்பாறை)

★ கலைநிலவன் (நவரத்தினம் மேகராசா — மட்டக்களப்பு)

★ அழகுராஜ் (மயில்வாகனம் லோகதாசன் — அம்பாறை)

★ அஹ்சனன் (அந்தோனி நிசலஸ் — மட்டக்களப்பு)

★ தேவகாந்தன் (மனோகரன் மெல்றோஸ் — மட்டக்களப்பு)

★ கமலசுதன் (பாபு யெஸ்அரன் — மட்டக்களப்பு)

★ மயூரன் (வீரக்குட்டி பேரின்பநாதன் — அம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன விமானம் பற்றி இதுவரை சரியான தகவல் இல்லை!

### கடலில் விழுந்ததை மீனவர் கண்டனராம்

கொழும்பு, ஒக். 1

பலாலியில் இருந்து இரத்மலானை நோக்கி நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்த சமயம் காணாமற்போன 'லயன் ஏயர்' தனியார் விமானம் தொடர்பாக நேற்று இரவு வரை உத்தியோக பூர்வமான தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

காணாமற்போன விமானம் மன்னார் கரையோரத்தில் வீழ்ந்து நொருங்கியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக 'ரூபவாஹினி' நேற்றிரவு அறிவித்த போதும் —

இது தொடர்பாக தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும் —

இன்று விவரங்கள் வெளியாகலாம் என்றும் — மன்னார் செயலக அதிகாரிகள் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் தெரிவித்தனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## எமது ஆலோசனையை ஏற்றிருந்தால் இந்தக் கதி ஏற்பட்டிருக்கமாட்டாது

### அரசு மீது புளொட் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 1

"நாம் வழங்கிய ஆலோசனைகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் லயன் எயர் விமானம் பயணிகளுடன் காணாமல் போன சம்பவத்தைத்தடுத்திருக்க முடியும்".

இப்படி புளொட் இயக்கம் அரசாங்கம் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

புளொட் இயக்கத்தின் கொழும்புத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.40 மணியளவில் பலாலி விமான நிலையத்திலிருந்துகொழும்பு நோக்கிப் புறப்பட்ட லயன் [illegible] 24 அன்ரனோவ் 602 இலக்க விமானம் 48 பயணிகள், 4 உக்ரைன் விமானிகள், 2 விமானச் சிப்பந்திகள், ஒரு தொழிலாளி உட்பட 55

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமான சேவை குறித்து முரண்பாடான தகவல்கள்

பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையிலான தனியார் விமான சேவையை மீள ஆரம்பிப்பது தொடர்பாக மாறுபட்ட தகவல்கள் நேற்று வெளியாகி இருந்தன.

''லயன் ஏயர்'' விமான சேவை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் 'லயன்ஏயர்' நிறுவனம் அறிவித்திருந்த போதும் சேவை இன்றுமீண்டும் ஆரம்பமாகும் என்று ''ரோய்ட்டர்'' தெரிவித்ததாக ரூபவாஹினி அறிவித்தது.

''மொனறா'' சேவை இன்று தனது சேவையை ஆரம்பிக்கும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்துள்ள போதும் நேற்றிரவு வரை அத்தகவலை ஊர்ஜிதம் செய்யமுடிவில்லை. அதேநேரம்— மொனரா சேவை நேற்று இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டு ஏராளமானவர்கள் நேற்றுக் காலை யாழ். ரயில் நிலையச் சந்திக்கு சென்றனராயினும் ஏமாற்றத்துடன் திரும்பினர். (இ-3-6-5-139)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுச்சாமி நடராசா

(முன்னாள் உத்தரவு பெற்ற வியாபாரி, ஸ்ரேசனடி, கோண்டாவில்)

நெட்டிலிப்பாய், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுச்சாமி நடராசா 30-09-98 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் கொக்குவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற நாகரத்தினத்தின் அன்புக் கணவரும் கோண்டாவிலைச் சேர்ந்த வைத்திலிங்கம் கந்தையாவின் சகோதரரும் தர்மேஸ்வரி (கனடா), அங்காதேவி (வவுனிக்குளம்), மகாலட்சுமி (சுதுமலை), தேவி (கோண்டாவில்), மகேந்திரமலர் (சுவிஸ்), கணேசபிள்ளை (வவுனிக்குளம்), சாம்பசிவம் (கொழும்பு), பரமசிவம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதசுந்தரம், துரைராசா, காலஞ்சென்ற சோமாஸ்கந்தன், செல்வநாயகம், வசந்தநாதன், புனிதவதி, வனஜா, கிரிஜா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (1-10-98) வியாழக்கிழமை காலை 10-00 மணிக்குக் கோண்டாவில் மேற்கு, சைவப்பாடசாலை ஒழுங்கையிலுள்ள அவரது தற்போதைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காகக் காரைக்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தேவி செல்வநாயகம்
(மகன்)

'மகேந்திரவாசம்',
கோண்டாவில் மேற்கு.

(59557)

---

செல்வி

## மெர்லின் மைதிலி தார்சீசியஸ்

(முன்னாள் ஆசிரியை, யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

செல்வி மெர்லின் மைதிலி நேற்று (30-09-98) கொழும்பில் காலமானார்.

இவர் மோசேஸ் தார்சீசியஸ் (முன்னாள் ஆசிரியர், யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி); - சிசிலியா பபா ஆகியோரின் அன்பு மகளும், டாக்டர் எவாறிஸ்ரஸ் மல்கம் (E.U. பொறல்ல, கொழும்பு), றெமிஜியஸ் மொறிஸ் (கனடா), ஜெனிசியஸ் மினோசன் (வெளிவாரி மாணவன், திறந்த பல்கலைக் கழகம், கொழும்பு), சசியாணி செறாப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மயில்வாகனம் மரியராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, சென். றோக் றோ.க. வித்தியாலயம்), ஆசீர்வாதம் மரியநாயகம் ஆகியோரின் அன்பு மருமகளும், S.M. மரியநாயகத்தின் (ஆசிரியர், யா/ நாவற்குழி ம.வி.) பெறாமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (01 - 10 - 1998) மாலை 4-30 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலையில் இருந்து கனத்தை பொதுச் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். அவருக்கு யா/ புனித மரியன்னை பேராலயத்தில் இன்று பிற்பகல் 4-00 மணிக்கு (புதிய நேரம்) இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ம. மயில்வாகனம்,
திரு. S.M. மரியநாயகம்.

39, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(59564)

---

திருமதி

## இளையாச்சி ஐயாத்துரை

காங்கேசன்துறை தையிட்டியைப் பிறப்பிடமாகவும் இல. 49/4A யாழ்வீதி, சிறாம்பியடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இளையாச்சி ஐயாத்துரை (30. 09. 98) புதன்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி ஆறுமுகம் நாயகம் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் ஐயாத்துரையின் அன்பு மனைவியும் அருளானந்தம் (குருநகர் அரசினர் வைத்தியசாலை), சதானந்தன் (கனடா), விவேகானந்தன் (கனடா), முருகானந்தன் (கனடா), ஜெயானந்தன் (கனடா), ஜெயந்தி (ஆசிரியை, யா/கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரபவானி (ஆசிரியை, யா/ புனித மரியாள் வித்தியாலயம் O.L.R), செந்தமிழ்செல்வி (கனடா), சிவவனிதா (கனடா) தர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆசைப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர், நடேஸ்வரா கல்லூரி), காலஞ்சென்ற மீனாட்சி, இலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், அனிருத்தன், கீர்த்தன், ஆரா அமுதன், ஆர்வலன், வித்யானி, மதுரா, அஜனிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
ஐ. அருளானந்தம்
(மகன்)

49/4 A யாழ்வீதி,
சிறாம்பியடி
யாழ்ப்பாணம்.

(59563)

---

## சிறுவர் தினத்தையொட்டி சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஒக். 1

சிறுவர் தினம், முதியோர் தினம் ஆகியவற்றையொட்டி நல்லூர் லயன்ஸ் கழகம் விசேட மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்துள்ளது.

திருநெல்வேலி முத்துத்தம்பி பாடசாலைச் சிறுவர்கள், நிறைவாழ்வு இல்ல சிறுவர்கள் ஆகியோருக்கான மருத்துவ சிகிச்சைமுகாமும்—கைதடி முதியோர் இல்லத்திலும் இன்று பிற்பகல் 2-00 மணிக்கு மருத்துவ சிகிச்சை முகாமும் – இடம்பெறவுள்ளன. (இ-3)

## மாதாந்த இசை நிகழ்வு

இலங்கை இசை வேளாளர் சங்கத்தின் மாதாந்த இசை நிகழ்வு நாளை இணுவில் மஞ்சத்தடி சிவசுப்பிரமணியர் தேவஸ்தானத்தில் இடம்பெறவுள்ளது.

சங்கத் தலைவர் எஸ். ஆர். ஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மிருதங்க விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ நா. சோமாஸ்கந்த சர்மா பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இசை நிகழ்வில் தாவடி எம். குகதாஸ் குழுவினரின் மங்கள இசை, எஸ். பதமலிங்கத்தின் (தலைவர், நுண்கலைப்பிரிவு) கர்நாடக இசைக்கச்சேரி ஆகியன இடம்பெறவுள்ளன. பிரபல மிருதங்க வித்துவான் கலாபூஷணம் ஏ. சந்தானகிருஷ்ணன் மிருதங்கம் வாசிப்பார். எஸ். திவாகரன் வயலினும் பி. கணேசன் கஞ்சிராவும் வாசிப்பர். (இ-3)

## தலைமைத்துவப் பயிற்சி

யாழ். றோட்டறிக்கழகத்தின் ஏற்பாட்டில் இன்ரறக் உறுப்பினர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி நிகழ்வு நாளை மறுதினம் காலை 9மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. (இ-3-6)

## கல்விப் பணிப்பாளர் கடமை ஏற்பு

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளராக கலாநிதி என். தணிகாசலம் பிள்ளை இன்று கடமை ஏற்கிறார்.

தற்சமயம் வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றும் என். சுந்தரலிங்கம் ஓய்வுபெறும் டிசம்பர் மாதம் வரை அனுமதிக்கப்பட்ட லீவில் செலவதாகத் தெரியவந்தது. (இ-51-3)


ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
அரவிந்தசாமி
மதுபாலா – ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் – நாஸர்
நடித்த
ரோஜா
இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/5020)



நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தேசியவிருது பெற்ற
சிவாஜி - ராதா
சத்தியராஜ் நடித்த
முதல்மரியாதை
(ரீல்)
காட்சி: 10-30, 2-30
(59544)


## கல்விவலயம்3 அலுவலகம் புலோலியில் இயங்கும்

யாழ். கல்வி வலயம் மூன்றுக்கான அலுவலகம் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன்பாடசாலைக் கட்டடத்தில் அமையவுள்ளது.

இக்கல்வி வலயத்தின் கீழ் பருத்தித்துறை, மருதங்கேணி, கரவெட்டி ஆகிய கோட்டக் கல்வி அலுவலகத்தின் கீழ் இருந்த பாடசாலைகள் இணைக்கப்பட்டுள்ளன. யாழ். வலயம் மூன்றின் கல்விப் பணிப்பாளராக சி. சிவராசா பொறுப்பேற்கவுள்ளார். இவ்வாரம் முதல் புதிய வலயம் செயற்படவுள்ளது. (ஐ-118)


சாவகச்சேரி
லயன்ஸ் கழகம்
நடத்தும்
பரிசோதனை
இடம்: வரணி மகா வித்தியாலயம்
காலம்: 05 - 10 - 98 திங்கட்கிழமை
நேரம்: காலை 9 . 00 மணி
யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை
கண் டாக்டர். செல்வி ம. சரவணமுத்து அவர்கள்
தேர்ச்சி பெற்ற மூக்குக் கண்ணாடி நிபுணர்
எஸ். எம். பெர்னான்டோ அவர்கள்
► கண் பரிசோதனை
► இரத்த அமுக்கம்
► சலரோக பரிசோதனை
► வாய்ப்புற்று நோய்
► தொழுநோய்
► பொது வைத்தியம் (கி/5027)


# மரண அறிவித்தல்கள்

திருமதி

## பத்மாவதி சீனித்தம்பி

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பத்மாவதி சீனித்தம்பி நேற்று 30-09-98 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற இராமலிங்கம் சீனித்தம்பி (P.W.D.) அவர்களின் அன்பு மனைவியும், முத்தையா (பண்டி)-மீனாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் திருமதி ச. தர்மரஞ்சிதம், காலஞ்சென்ற சி. சிறீசந்திரபாலன் (C.E.B.), திருமதி இ. மனோகராணி, திருமதி ப. செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற R. சண்முகலிங்கம் (கெங்கநாதன் — யாழ். புகையிரத நிலைய முன்னாள் அதிபர்), திருமதி சி. விஜயலட்சுமி, திரு. வ. இரத்தினசிங்கம் (முன்னாள், C.E.B.), திரு. அ. பரராஜசிங்கம் (வர்த்தகத் திணைக்களம், மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி இ. சத்தியலட்சுமி, திரு. மு. மகாரட்ணம் (முன்னாள் GM, C.E.B), திருமதி வா. மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற மு. பஞ்சலிங்கம் (முன்னாள் யாழ். அரச அதிபர்), திரு. மு. பரந்தாமன் (முத்தையா அன் சன்ஸ்), திரு. மு. யோகேஸ்வரன் (Agro Marine), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இ. சின்னப்பு, திரு. இ. சுப்பிரமணியம், காலஞ்சென்ற இளையதம்பி, திருமதி ம. சரஸ்வதி, திரு. வாமதேவன், திருமதி ப. கணேஸ்வரி, திருமதி ப. சுசீலாதேவி, திருமதி யோ. நித்தியகல்யாணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற ச. சந்தன், சி. பவித்திரா (ஆண்டு 11 மாணவி, யாழ் இந்து மகளிர் கல்லூரி), சி. பவானி (ஆண்டு 7 மாணவி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), இ. ரம்யா (A/L 99 மாணவி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ப. ஜேனுகா (ஆண்டு 10 மாணவி, மட்டக்களப்பு வின்செண்ட மகளிர் கல்லூரி), ப. ராகவன் (ஆண்டு 8 மாணவன், மட்டக்களப்பு/புனித மைக்கேல்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-10-98) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி தர்மரஞ்சிதம் சண்முகலிங்கம்
(மகள்)

56, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(59550)

---

## பேரம்பலம் சின்னப்பு

(ஓய்வு பெற்ற அதிபர்)

28. 09. 98 அன்று காலமான பே. சின்னப்பு அவர்களின் இறுதிச் சடங்குகள் (01. 10. 98) இன்று வியாழக்கிழமை பி.ப. 1.00மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. புனிதவதி
(மைத்துனி)

உடுவில்.

(59549)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மருந்துக் கலவையாளர்

## பரீட்சையை இங்கு நடத்த முயற்சி

திருநெல்வேலி ஒக். 1

மருந்துக் கலவையாளர்களின் வினைத்திறமை காண் தடைப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு 20-க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்குமானால் இப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடன் இப் பரீட்சையை இங்கு நடத்துவது தொடர்பாக யாழ். சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் தொடர்பு கொண்டு கேட்ட போது மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்ற சகல மருந்துக் கலவையாளர்களையும் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையும் அதிக எண்ணிக்கையானோர் விண்ணப்பிக்கும் பட்சத்தில் இங்கு நடத்த வாய்ப்பு இருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை —

குடும்ப நலசேவை உத்தியோகத்தர்சங்க யாழ். கிளையும் தமக்கான வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ'135)

## வல்லிபுரத்தில் அன்னதானம்

வடமராட்சி, ஒக். 1

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி வல்லிபுர ஆழ்வார் உற்சவகால அன்னதான சபையினால் முச்சம்பலம் பொன்னையா சாமியார் மடத்தில் தினமும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

சபையின் பொன் விழாவான இவ்வாண்டில் அன்னதான சபையின் பொன் விழாவும் நடைபெறவுள்ளது. (ஐ-173)

# ஒரு பாடசாலையில் 8 ஆண்டுகளுக்கு பணிபுரியும் ஆசிரியருக்கு இடமாற்றம்

### அமைச்சு தீர்மானம்

கொழும்பு, ஒக். 1

பாடசாலைகளில் 8 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய அனைத்து ஆசிரியர்களுக்கும் அடுத்த ஆண்டு கட்டாயமாக மாற்றம் வழங்குவது என கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கென 8 ஆண்டுகளுக்கு மேல் ஒரு பாடசாலையில் பணியாற்றிய ஆசிரியர்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டுவது சம்பந்தமாக இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் சுற்றறிக்கை ஒன்று அனுப்பவுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய ஆசிரியர் இடமாற்றுத் திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது எனவும் முதலில் இத்திட்டம் தேசிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்படும் என கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சாட் பதிரான தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக ஒரே பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதற்கு இதற்கு முன்னரும் பல தடவைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அம்முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்தங்கிய இடங்களில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களின் பற்றாக்குறையும் பிரபல பாடசாலைகளில் ஆசிரியர் மேலதிகமாகவும் இருப்பதைத் தவிர்க்கும் முகமாக புதிய இடமாற்று முறை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் கூறியதாக 'லங்காதீப' செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-10)

# கைதடி முதியோர் இல்லத்தில் இவ்வாரம் பல நிகழ்வுகள்

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் இன்று முதலாம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் ஒரு வார காலத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

சமய நிகழ்ச்சிகள், தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றும் நிகழ்வுகள், சுகாதார நிகழ்வுகள் முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியவர்களுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் கலைநிகழ்ச்சிகள், முதியோரைபரிசில்கள் வழங்கி கௌரவித்தல் ஆகிய பல்வேறு நிகழ்ச்சிகள் இந்த ஒருவாரகாலத்தில் இடம் பெறவுள்ளன— என்று முதியோர்இல்லப் பொறுப்பதிகாரியான அத்தியட்சகர் திருமதி இ. துரைரத்தினம் தெரிவித்தார். அண்மையில் காலம் சென்ற 'மில்க் வைற்' நிறுவன அதிபர் ''சிவதர்மவள்ளல்'' க. கனகராசா இந்த இல்லத்திற்கு ஆற்றி வந்த உதவிகளை நினைவு கூரு முகமாக அவரது திருவுருவப் படமும் இல்லத்தில் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது. 7 ஆம் திகதியன்று நடைபெறும் இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலரும் கலந்து கொள்வார்கள். (ஐ-135)

## எழுதுநர் சங்கத் தலைமையகம் கொழும்பில் தாக்கப்பட்டது

கொழும்பு, ஒக். 1

இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் தலைமையகம் மீது இனந்தெரியாதோர் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதிக்கு சேதமிழைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 23 ஆம் திகதி இரவு 7.00 மணியளவில் இக் கட்டடத்தின் கதவுகளை உடைத்து உள்ளே கும்பலொன்று நுழைந்து அங்குள்ள பொருள்களைச் சேதப்படுத்தி அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த ஊழியர்களை அச்சுறுத்தி விட்டு சில பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளது என அச் சங்கத்தின் தலைவர் குணசேன மஹாநாம தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகரில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள சோ. சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் இந்தக் கட்டடம் அமைந்துள்ளது. இந்தக் கட்டடத்திற்கு அருகேயே விமானப் படைத் தலைமையகம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

### வாராந்த நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதி ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''உரையரங்கு கலை நிகழ்வு'' உடுவில் இந்து இளைஞர் மன்றத்தினரால் வழங்கப்படும்.

பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந் நிகழ்வு இடம்பெறும்.

இந் நிகழ்விற்கான அறிமுக வுரையை உடுவில் இந்து இளைஞர்மன்ற உறுப்பினர் செல்வன் எஸ். தியாகச்சந்திரன் நிகழ்த்துவார்.

## காந்த ஈர்ப்பு வலுவுள்ள நட்சத்திரங்கள்

### விண்வெளியில் உள்ளன

வாஷிங்டன், ஒக். 1

காந்த ஈர்ப்பு விசை கொண்ட நட்சத்திரங்கள் விண்வெளியில் இருக்கின்றன என்பது நிரூபிக்கப் பட்டிருப்பதாக நாஸா' விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் நட்சத்திர மண்டலத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த வெடிப்புச் சம்பவம் இதனை ஊர்ஜிதப்படுத்தியிருப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

பூமியில் இருந்து 20 ஆயிரம் ஒளி ஆண்டுகள் தொலைவில் நட்சத்திர மண்டலத்தில் இந்த வெடிப்பு ஏற்பட்டபோது 5 நிமிட நேரம் பளிச்சிடும் கதிரியக்க ஒளி ஏற்பட்டதாகவும்—

ஹவாய் தீவுகள் மீதான வளிமண்டலத்தில் அதன் பாதிப்பு உணரப்பட்டதாகவும் அவர்கள் கூறினர்.

300 ஆண்டு காலத்தில் சூரியன் வெளியிடும் சக்தி அந்த 5 நிமிட நேரத்தில வெளியானதாகவும் நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (ஐ-ரீ)

## ஐ.நா. அகதிகள் குழு ஈரான் வந்தடைந்தது

தெஹ்ரான், ஒக். 1

ஆப்கானிஸ்தானில் இருந்து போதைப் பொருள்கள் கடத்தப்படுவதை தடுப்பது தொடர்பான வழிமுறைகளை ஆராய ஐ. நா. போதை மருந்துப் பொருள் நிபுணர்கள் ஒரு வாரகாலப் பயணம் மேற்கொண்டு நேற்று முன்தினம் ஈரான் போய்ச் சேர்ந்தனர்.

தலிபானுக்கு எதிராக ஈரானியப் படைகள் நிறுத்தப்பட்டுள்ள கிழக்கு எல்லைப் பகுதிகளை பதின்மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா. போதைப் மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டுத் திட்டக்குழு பார்வை இட உள்ளது என தெஹ்ரானில் ஐ. நா. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

போதைப் பொருள், அபின் ஆகியவற்றை உலகிலேயே அதிகளவு தயாரிக்கும் ஆப்கானிஸ்தான் இவற்றை ஈரான், துருக்கி, மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு கடத்துகின்றது.

இப் போதைப் பொருள்கள் கூடுதலாக ஆப்கானிஸ்தானில் இருந்து ஈரானின் கிழக்குப் பிரதேசம் ஊடாகவே கடத்தப்படுவதாக ஐ.நா. அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (இ-ரீ)

# இலங்கை ராணுவத்தின் வன்முறையை மத்திய அரசு தடுக்கவேண்டும்

### கோபாலசாமி கோரிக்கை

கொழும்பு, ஒக். 1

இலங்கை இராணுவம் தொடர்ந்து அத்துமீறி நடந்து கொள்ளும் வன்செயல்களை மத்திய அரசு தலையிட்டு உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று ம. தி. மு.க பொதுச் செயலர் வை. கோபாலசாமி கோரியுள்ளார்.

வெளிநாடு சென்றிருக்கும் வை. கோபாலசாமி அதற்கு முன்னர் சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இவ்வாறு கோரியுள்ளார்.

நாகை மாவட்டம் வேதாரணியம் கோடியக்கரை கடற்கரைப் பகுதியில் மீன்பிடிக்கச் சென்றபோது இலங்கை இராணுவத்தால் கடத்தப்பட்ட 6 மீனவர்களை மீட்க உடன் நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் எடுக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

இலங்கையின் கொடுமைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று தமிழ்நாடு மீன்வளத் துறை அமைச்சர் திருமதி ஜெனீபர் சந்திரன் மத்திய அரசைக் கோரியுள்ளார். (ஐ-6-10)

## தேசிய விவாதம் நடத்த அத்வானி யோசனை

புதுடில்லி, ஒக். 1

தவறிழைக்கும் மாநில ஆட்சிகளை அகற்ற அரசியல் சாசனத்தின் 356 ஆவது சரத்தைப் பயன்படுத்துவது குறித்து தேசிய விவாதம் நடத்த இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி யோசனை தெரிவித்துள்ளார்.

இந்த சரத்தைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற நிலைமை பீஹாரில் நிலவுகின்றது என்று கருதிய போதிலும் கூட ஜனாதிபதியின் விருப்பத்தை மதிக்கும் வகையில் இந்த விடயத்தை வற்புறுத்தவில்லை என்று அத்வானி மேலும் தெரிவித்துள்ளார். (இ-ரீ)

## ஜேர்மன் தேர்தலில் 80 சதவீத வாக்களிப்பு

பொன், ஒக். 1

1994 ஆம் ஆண்டு ஜேர்மனியில் நடைபெற்ற தேர்தலிலும் விட கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் சற்றுக் கூடுதலானோர் வாக்களித்ததாக ஜேர்மன் தேர்தல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த தேர்தலின் போது 79 சதவீதமானோர் வாக்களித்திருந்தனர்.

இம்முறை 80 சத வீதமாக இது அதிகரித்துள்ளது. (இ)

### 1975 சிறைப் படுகொலை

## பங்களாதேஷில் மூவர் கைதாகினர்

டாக்கா ஒக், 01

பங்களாதேஷில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பங்களாதேஷ் ஸ்தாபகரும் முதல் பிரதமருமான ஷேக் முஜிபூர் ரஹ்மானின் ஆட்சியின் போது சதிமுயற்சியில் ஈடுபட்டதற்காக 1975 ஆம் ஆண்டில் அரசியல்வாதிகள் நான்கு பேர் கைது செய்யப்பட்டு டாக்கா மத்திய சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அந்த நால்வரும் 1975 ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் திகதி சிறையில் வைத்தே சுடப்பட்டு கொல்லப்பட்டனர்.

75 ஆம் ஆண்டு நடந்த அந்தக்கொலைச் சம்பவத்திற்கும் இவர்களுக்கும் தொடர்பு இருப்பதாகச் சந்தேகிக்கப்படுவதை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

இ. துரைராசா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 411540359V) 27 - 09 - 98 அன்று புத்தூரில் இருந்து நல்லூர் வரையான பருத்தித்துறை வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 298, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோயிலடி, நல்லூர் என்ற முகவரியில் சேர்க்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(59493)

மதியழகன் தயாளினி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (755104310V) கைப்பேர்சுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து அம்பாள் கொம்மினிகேசன் பளை அல்லது சேகர் ரயர் வேக்ஸ் கண்டி வீதி, பளை என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும்.

(சி/5023)

தெல்லிப்பழையில் வசித்து வரும் தற்போது கரந்தன் மேற்கு நீர்வேலியில் வசிப்பவருமான கதிராமு வயிரவப்பிள்ளை ஆகிய எனது இரு அடையாள அட்டைகளும் அச்செழு போயிட்டி எனும் இடத்திற்கு போய் வரும் வழியில் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் C/O சி. கனகரட்ணம், கரந்தன் மேற்கு, நீர்வேலி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அல்லது தெல்லிப்பழை தபாற்கந்தோரில் ஒப்படைக்கவும்.

(59524)

### வீடு

யாழ். சேவையில் வீடு நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? 3. நாடகம் எழுதுவது எப்படி? ரூபா 50 மட்டுமே.

(59516)

### புத்தகம்

கேதார கௌரி நோன்புக் கதைப் புத்தகம் விற்பனையாகிறது. தபாலில் பெறுவதாயின் ரூபா 15 அனுப்பவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

(59528)

## கையெழுத்து சஞ்சிகைப் போட்டி

வலிகாமம்தெற்கு, ஒக். 1

பாடசாலை மாணவர்களிடையே கலை, இலக்கியஆர்வம், ஆக்கத்திறன், ஆற்றல், கூட்டுமுயற்சி, குழுமுறைக் கற்றல், தொடர்பாடல் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் மாணவர்களிடையே கையெழுத்து சஞ்சிகைப்போட்டி நடத்தப்படவுள்ளது.

கோட்ட, மாவட்ட, மாகாண மட்டங்களில் தெரிவு செய்யப்படும் மிகச் சிறந்த மூன்று சஞ்சிகைகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

இப் போட்டிகள் பாடசாலை மட்டத்தில் நவம்பர் 4 ஆம் திகதிக்கு முன்பும், கோட்டமட்டத்தில் நவம்பர் 27 திகதிக்கு முன்பும் வலய-மாவட்ட மட்டத்தில் டிசம்பர் 2ஆம் திகதிக்கு முன்பும், மாகாணமட்டத்தில் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பும் நடத்தப்பட வேண்டும் என மாகாணக்கல்விப் பணிப்பாளர் க. சந்தசாமி அறிவித்துள்ளார்.

(ஐ-152)

## ENGLISH STENOGRAPHY COURSE

Venue: Vadamaradchy Steno Club, Vathiri, Karaveddy

**Duration:** 1 Year

**Basic Requirements:**

G. C. E. (O/L) Including Credit Pass in English Language and pass in Tamil and Mathematics with six Subjects

**Age Limit:** 18 — 25

**Sponsored by:**

National Apprentice and Industrial Training Authority

Date of Registration:

06 - 10 - 1998 (Tuesday)
1-00 p. m.

- SECRETARY

Vadamaradchy Steno Club,
Vathiri, Karaveddy.

(C/5024)

சுன்னாகம்

## ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தானம்
## கேதாரகௌரி விரதம்

மேற்படி தேவஸ்தானத்தில் கேதாரகௌரி விரதம் செப்ரெம்பர் 30 ஆம் திகதி ஆரம்பமாகி, தினமும் பிற்பகல் 3-30 மணிக்கு அபிஷேகம் பூசைகள் நடைபெற்று வருகின்றன. 'ஒக்ரோபர் 1 ஆம் திகதியில் இருந்து (இன்று) தினமும் மாலை 5 மணிக்கு

'அருள் ஞான வித்தகர்'
சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்
'சிவநெறி மறவாச் சிந்தையர்'
என்ற தலைப்பில் இசைச் சொற்பொழிவாற்றுவார்.

- தேவஸ்தானத்தினர்

[சி/5025]

## யாழ் / புனித மரியாள் வித்தியாலயம்
( ஒ. எல். ஆர் ) யாழ்ப்பாணம்
## பழைய மாணவர் ஒன்றுகூடல்

மேற்படி எமது வித்தியாலத்தில் 125 ஆவது ஆண்டு விழா 1998 ஒக்ரோபர் 14, 15 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இது சம்பந்தமாக பழைய மாணவர்கள் அனைவரும் 04 - 10 - 98 ஆம் திகதி அன்று நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்      செயலாளர்

(59527)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 18 — 09 — 1909



இறப்பு 28 — 10 — 1997

அமரர்
கதிரிப்பிள்ளை நவரத்தினராசா
திதி: 01 — 10 — 1998

அன்புக்கோர் இடைக்கமைாய்
ஆற்றலுக்கோர் உறைவிடமாய்
வழிகாட்டிய அன்பு உள்ளமே
ஆண்டுகள் பல கடந்தாலும்
நாம் உம்மை மறவோம்.

பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கொத்தியகாடு,
தொண்டமானாறு.

தற்போதைய முகவரி
வீரபத்திரர் கோயிலடி,
உடுப்பிட்டி.

(59346)

## வருகவென வாழ்த்துதும்

கல்விப்புலத்தினை மெருகூட்டவரும்
உயர்திரு.
**நா. தணிகாசலம்பிள்ளை**
Ph. D.
யாழ் வலயம் - 1
மேதகு **ப. விக்கினேஸ்வரன்**
B. Sc.
தீவக கல்வி வலயம் - 5
கல்விப் பணிப்பாளர்களை வருகவென
வரவேற்கும்
தீவக - பதிலதிபர்கள் சங்கம்

(59552)

## கண்ணீர் அஞ்சலி

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலய
இளைப்பாறிய ஆசிரியை
திருமதி
**அங்கயற்கண்ணி ஸ்ரீ புஸ்பநாதன்**

அவர்கள் சிவபதமடைந்தமையையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
பா. அ. சங்கம்.
யா/மல்லாகம் கனிஷ்ட
வித்தியாலயம்.

(59555)

## கருத்தரங்கு

பொருள்:

**'குடும்பத்தில் சமூகத்தின் செல்வாக்கு'**

கருத்துரை வழங்குபவர்:
அருட்திரு CJ. ஜெயக்குமார் M.A [Soc.]

நாள்: 05 - 10 - 1998 திங்கட்கிழமை
நேரம்: பி. ப. 3.00 மணி
இடம்: 'அகவொளி'

குடும்பவளத்துணை நிலையம்
131, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- இயக்குநர்

(59551)

## பிற்போடப்பட்டுள்ளது

வடலியடைப்பு இந்து இளைஞர் மன்ற கல்விக்கழக வளர்ச்சி நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 30 - 09 - 98 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்படவில்லை என்பதனையும் அது 30 - 10 - 98 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதனையும் அறியத் தருகின்றோம்.

நிர்வாகம்,
இந்து இளைஞர் மன்றம்,
வடலியடைப்பு.

(59497)

## கண்ணீர்ப் பூக்கள்

வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலாளர்
ஆ. மகாலிங்கம் அவர்களின்
அன்புத் தாயார்
திருமதி
**ஆ. கதிராசிப்பிள்ளை**

அவர்கள் 28-09-98இல் இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரது இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஏழாலை லெனின் சனசமூக நிலைய
நிர்வாகிகள், அங்கத்தவர்கள்,
நிலைய வாழ் மக்கள்.

(59548)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேயர், ஊழியர்களின் மறைவு

# மாநகர சபைக்குப் பேரிழப்பு

## இரங்கல் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 1

அகால மரணமடைந்த யாழ். மாநகர முதல்வர் பதில் ஆணையாளர் பொறியியலாளர், கட்டடக் கலைஞர், தட்டெழுத்தாளர் ஆகியோரின் இழப்பு யாழ். மாநகர சபைக்குப் பேரிழப்பாகும்.

யாழ். மேயர் மற்றும் ஊழியர்களின் மறைவையொட்டி நடத்தப்பட்ட இரங்கல் கூட்டத்தில் உரையாற்றிய யாழ். மாநகர சபை பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில நடத்தப்பட்ட இக்கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:—

காலஞ்சென்ற எமது ஊழியர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என்பதை விட நண்பர்களாகவே எம்மோடு பழகிவந்தனர். இவர்களுடைய அன்பும், பணிவும் எல்லோரையும் கவர்ந்து விட்டது. மாநகர முதல்வர் குறுகிய காலம் பதவியிலிருந்தாலும் எமது ஊழியர்கள் அனைவரையும் அன்பால் வென்றெடுத்து தம்மோடு இணைத்துக்கொண்டு செயற்பட்டார். பொறியியலாளர் ஈஸ்வரம் ஐயா அவர்கள் எங்களுக்கு ஒரு தந்தையாக நின்று வழிகாட்டியவர். பதில் ஆணையாளர் சு. பத்மநாதன் சிறந்த நிர்வாகியாகி இருந்து செயற்பட்டவர். தட்டெழுத்தாளர் பத்மராஜா வெளித்தொடர்புகளை ஏற்படுத்துவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். மல்லிகா ராஜரத்தினமும் சிறந்த கட்டடக் கலைஞராக விளங்கியதுடன் மாநகரசபையின் நூலக சேவைக்கும் உதவிபுரிந்தவர். இத்தகைய ஆற்றல்களும் சிறப்பும் வாய்ந்தவர்களை எமது சமூகம் தொடர்ந்தும் இழந்து வருகிறது. இதிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லை— என்று தெரிவித்தார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரம் உரையாற்றும் போது கூறியதாவது;

மறைந்த மேயர் பழகுவதற்கு இனியவர்; தமிழறிவு படைத்தவர்; எல்லோருடனும் எளிமையாக பழகும் பண்புடையவர்; அதே போன்று பதில் ஆணையாளரான பத்மநாதன் 25 வருடங்களுக்கு மேலாக யாழ். மாநகரசபையில் கடமையாற்றி வந்த சிறந்த நிர்வாகி. சிறந்த ஆங்கில தட்டெழுத்தாளரான பத்மராஜா மருத்துவ சொற்பிரயோகங்களையும் மிகவும் கடினமான வசனங்களை எளிதாக்கி கடிதங்கள் தயாரிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தவர். கட்டடக்கலைஞரான மல்லிகா ராஜரத்தினம் யாழ். மாவட்டத்திலே ஒரு சிறந்த கட்டடக்கலைஞராவார், அண்மையில் தான் தனது கணவரை இழந்தவர். இன்று தன்னுயிரையும் இழந்து விட்டார். பொறியிலாளரான ஈஸ்வரம் குழந்தை உள்ளம் படைத்தவர். மாநகரசபையின் அனைத்துச் செயற்பாடுகளிலும் அயராது உழைத்தவர்— இவ்வாறு தெரிவித்தார்.

மாநகரசபை கணக்காளரும், பதில் ஆணையாளருமான எஸ். தனரஞ்சிதராஜன் உரையாற்றும்போது;

குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஊழியர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம். — என்று தெரிவித்தார்.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவன நீர்விநியோக பொறியிலாளர் எஸ். நவரத்தினராஜா, பொறியியலாளர் எஸ். ரவீந்திரகுமார் கணக்காளர், எஸ். ராஜேஸ்வரன் திட்டமிடல் பகுதி பிரதம எழுது வினைஞர் எஸ். இராமநாதன், தாய் சேய் நலன் பகுதி பொறுப்பாளர் திருமதி பரமநாதன், ஆயுர்வேத வைத்திய அதிகாரி எஸ். வேதநாதன், எஸ். கிருஸ்ணகுமார் ஆகியோரும் இரங்கல் உரை நிகழ்த்தினார்கள்.

(ஐ-5)

## புறநிலைப் படிப்பு அலகில் 131 பேர் பயிற்சி பெற்றனர்

தென்மராட்சி, ஒக். 1

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட ஆங்கில நிகழ்ச்சித் திட்டம், தொடர் பாடல் ஆங்கிலம், முகாமைத்துவம் ஆகிய பயிற்சி நெறிகளில் பயிற்சி பெற்ற 130 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளர் இ. ஜெயக்குமார் தலைமையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது.

வைபவத்திற்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சண்முகதாஸ் புவியியல் துறைத் தலைவர் பேராசிரியர் இராஜேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ-117)

## கால்நடைகளை கட்டி வளர்க்குக

சண்டிலிப்பாய், ஒக். 1

மானிப்பாய், கட்டுடை. சண்டிலிப்பாய் ஆகிய பகுதிகளில் காலபோக நெல் விதைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஆடு, மாடுகளைக் கட்டி வளர்க்குமாறு மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் பொதுமக்களுக்கு அறிவித்தல் ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. பயிர்களை அழிக்கும் கட்டாக்காலி ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டு ஏலத்தில் விற்கப்படும் என்று சம்மேளனத்தின் தலைவர் கி. ம. பொ. கு முதலியார் அறிவித்துள்ளார்.

(ஐ-135)

## தேங்காய் விலை உயர்வால் பாவனையாளர் பாதிப்பு

திருநெல்வேலி, ஒக். 1

தேங்காய் விலை அதிகரித்து வருவதால் பாவனையாளர்கள் மிகுந்த பாதிப்படைந்து வருகின்றார்கள். தேங்காய் விலை அதிகரித்துள்ளதை அடுத்து நன்றாக முற்றாத நிலையிலுள்ள இளம் தேங்காய்களைப் பிடுங்கி சந்தைக்கு விற்கக் கொண்டு வருவதையும் பாவனையாளர்கள் அவற்றை 30 ரூபா, 35ரூபா கொடுத்து வாங்கிச் சென்று ஏமாற்றமடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியிலிருந்தும்தினமும் வியாபாரிகள் தேங்காய்களைக் கொண்டு வந்து இங்குள்ள சந்தைகளில் விற்கின்ற போதிலும் விலை வீழ்ச்சியடையவில்லை.

## சுயவிவரம் சேகரிப்பு

வலி. தென்மேற்கு, ஒக். 1

வேலையற்று இருக்கும் விவசாய விஞ்ஞானப்பட்டதாரிகளின் சுய விவரங்களை வேலையற்றபட்டதாரிகள் சங்கத் தலைவர் கோரியுள்ளார்.

சம்பந்தப்பட்டோர் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ-185)

## சுயதொழில் கடன்

வடமராட்சி, ஒக். 1

மந்திகை, புலோலி வடகிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளில் சுயதொழிலில் ஈடுபடும் பெண்களுக்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் சுயதொழில் கடன் வழங்கப்படவுள்ளது.

இந்தபிரிவுகளைச் சேர்ந்த 50 பெண்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் கடன்கள் வழங்கப்படும். கால் நடை வளர்ப்பு, தையல், சிறுகைத் தொழில், சிறு வியாபாரம் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுள்ளோருக்கு இக்கடன் வழங்கப்படுவதுடன் தொடர்ந்து சுழற்சிமுறையில் ஏனைய பெண்களுக்கும் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடன் வழங்கும் நடவடிக்கையை பருத்தித்துறை பிரதேச செயலர் எடுத்துள்ளார்.

(இ-137)

## பயிற்சி நெறி இறுதி நாள் விழா

யாழ்ப்பாணம், ஒக். 1

சிறிலங்கா ஜேர்மன் சேபே நிகழ்ச்சித்திட்டம் ஜி. ரி. இசற் யாழ். புனர்வாழ்வு செயற்றிட்டம் ஆகியவற்றுடன் இணைந்து யாழ். பல்கலைக்கழகம் நடத்திய தொழில் முயற்சியாண்மை பயிற்சிநெறியின் இறுதிநாள் விழா கடந்த திங்களன்று யாழ். பல்கலைக்கழக சிற்றி ஹோலில் செல்வி நித்திலா சண்முகம் தலைமையில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், ஜி. ரி. இசற் இணைப்பாளர் ஸ்ரேபன், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாகாணமுகாமையாளர் வீ கணேசகுமார் ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இரு வாரங்கள் தொடர்ந்து நடைபெற்ற இப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

(இ-5-6)

# செய்திக் கொத்து

### மகஜர்

வட்டுக்கோட்டை ஒக். 1

அராலி மேற்கு புங்கங்குழி கிராமத்திற்குச் செல்வதற்கு போக்குவரத்துப் பாதைகள் எதுவும் இல்லாததால் இப் பகுதியில் இருக்கும் 41 குடும்பங்களும் அரசடி விவசாய வீதிவரையான பாதையை புனரமைத்து தமது போக்குவரத்துக்கு உதவுமாறு கோரி வலி. மேற்கு பிரதேச செயலாளருக்கு மகஜர் சமர்ப்பித்துள்ளன.

(ஐ-12)

### மனை முகாமை பயிற்சி வகுப்பு

நெல்லியடி, ஒக். 1

தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயத்தில் முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ், ஆறுமாத கால மனை முகாமைத்துவப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப் பாடசாலையின் மனையியல் ஆசிரியை செல்வி ந. ராகினியினால் இப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது மனை முகாமைத்துவம் வடமராட்சிப் பகுதியில் இப் பாடசாலையிலேயே முதற்றடவையாக ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(இ-109)

### கோயில் புனரமைப்பு

அராலி தெற்கு ஆகாயக் குளப் பிள்ளையார் கோயில் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுப் புனரமைப்பு வேலைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அடுத்த ஆண்டு முற்பகுதியில் மகா கும்பாபிஷேகம் செய்வதற்கு திருப்பணிச்சபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

(இ-12)

### றுபேலா தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக். 1

பெண்களுக்கு ஏற்படும் ஜேர்மன் சின்னமுத்து என்ற நோய்க்குரிய றுபேலா என்னும் தடுப்பூசி மருந்து போடும் பணி சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் வைத்து 208 பெண்களுக்கு இத் தடுப்பூசி மருந்து போடப்பட்டது.

(இ-15)

### தாய்மாருக்கு உணவு

தென்மராட்சி, ஒக். 1

தென்மராட்சிப் பிரதேசத்தில் தாய்மார்களுக்கான விசேட பால்மா முத்திரையின் ஒன்பதாம் இலக்க புள்ளிக்கான உணவுப் பொருள்கள் அந்தந்தப் பிரிவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

### வாணிவிழா

யாழ்ப்பாணம், ஒக். 1

பண்ணை ரெலிகொம் நிறுவனத்தின் வாணிவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு முகாமையாளர் கே. ரி. பாலசுப்பிரமணியம் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வில் பட்டிமன்றம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(ஐ-8)

### மதகு புனரமைப்பு

அரியாலை ஒக். 1

சுண்டுக்குளி சோமசுந்தரம் வீதியில் உள்ள மதகு ஒன்று தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது.

(இ-17)

### திருப்பணிகள் நிறைவு பெறுகின்றன

யாழ்ப்பாணம், ஒக். 1

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயிலில் சிற்ப வேலைகளுடன் கூடிய பஞ்சதள இராஜ கோபுரம் உள்ளிட்ட பல திருப்பணிகள் நிறைவு பெற்று வருகின்றன.

மேற்படி ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது.

(இ-8)

### விதை நெல்

வலி. தென்மேற்கு, ஒக். 1

நவாலி வடக்கில் மொட்டைக்கறுப்பன், 500-1 விதைநெல் தனிநபரால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை மேட்டு நிலத்தில் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குத் தேவையான 3 மாத சிறிய இனங்கள் தட்டுப்பாடாக உள்ளதாகவிவசாய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(இ-185)

### நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டன

நெல்லியடி, ஒக். 1

மந்திகை விவசாயிகள் சம்மேளனத்தின் ஊடாக விவசாயிகள் ஐவருக்கு யாழ். கெயர் நிறுவனம் ஐந்து நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

மந்திகை கிராமசேவை அலுவலர் பணிமனையில் வைத்து கெயர் நிறுவன திட்ட முகாமையாளர் கி. அ. அருள்ஞானம் இந்த நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கினார்.

(இ-109)

### நுண்கருத்திட்ட செலவுகள்

மூளாய், ஒக். 1

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் நடைமுறைப் படுத்திவரும் நுண் கருத்திட்டங்களுக்கு இதுவரை சுமார் 70 லட்சம் ரூபாவைச் செலவு செய்துள்ளது.

இச் செலவில் சுழற்சி முறைக்கடன் திட்டங்கள், கட்டட புனரமைப்பு வேலைகள், வீதித்திருத்த வேலைகள், விவசாயிகளுக்கான நலன்புரித் திட்டங்கள் போன்றன அடங்கி உள்ளன.

(இ-99)

### கட்டடம் அமைப்பு

தென்மராட்சி, ஒக். 1

கொடிகாமம் கிராமிய வைத்திய சாலையில் ஒன்பது லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வெளி நோயாளர் தங்குமிடக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் வழங்கியுள்ளது. வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிங்கம் தொலைத் தொடர்பு சேவை


மானிப்பாய் வீதி, தாவடி

★ 01-10-98 இன்று தொடக்கம் விசேட சலுகை.
★ வெளிநாட்டுத் தொடர்புகளைப் பெற ரூபா 80 மட்டுமே.
★ வெளிநாட்டிலிருந்து வரும் தொடர்புகளுக்கு நிமிடத்துக்கு ரூபா 5 மட்டுமே.
★ யாழ். நகரில் 'கதிரவனி'ல் இதே சலுகைகளுடன் எங்கள் சேவையைப் பெறலாம்.

கதிரவன்,
144, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(59482)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 17 — 08 — 1970

விண்ணில் 01 — 10 — 1996

### அந்தோனி றெஜினோல்ட்


ஆண்டு இரண்டு அகன்றதடா
ஆறுதல் இல்லை அப்பா!
தேறவழி தெரியவில்லை
தேவன் திருவடியில் நீ
வாழ்க என வணங்குகின்றோம்

அந்தோனி மரியநாயகி
(நற்றாய்)
செபமாலை பிலோமினா
(செவிலித்தாய்)

ராஜசிங்கம் வீதி,
திருநகர்,
யாழ்ப்பாணம்.

(59541)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்

அன்னை மடியில் 06-04-1946

இறைவன் அடியில் 12-10-1997

திதி: 1-10-1998

ஆதரிக்க ஆயிரம் உறவிருந்தென்ன
அரவணைக்க ஆயிரம் உள்ளமிருந்தென்ன
ஐயா! என்றழைக்க நீங்களில்லையே?
ஆண்டொன்று சென்றாலும் — உங்கள்
அன்பு முகமும் ஆசை வார்த்தைகளும்
எம் நெஞ்சை விட்டகலவில்லை......

அன்புத் தந்தையாய், கடமைமிகு குடும்பத் தலைவனாய் எம்மையெல்லாம் வழி நடத்திய எம் அன்புத் தெய்வமே! மாய்ந்த உங்கள் நினைவால் மனம் நொந்து வாழ்கின்றோம். எம் மனதில் நிலைத்திருக்கும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அரியாலை மத்தி, அரியாலை.

(59523)

## கூட்டுறவுப் பணியாளர் கௌரவிப்பு

சண்டிலிப்பாய், ஒக். 1

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 25 வருட காலசேவையைப் பூர்த்தி செய்த சங்க பணியாளர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழாவை விரைவில் நடத்துவது என்று சங்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது. சங்கத் தலைவர் க. திரவியம் தலைமையில் நடைபெற்ற சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. (ஐ-135)

## பழமரக் கன்று விநியோகம்

வலி. தெற்கு ஒக். 1

பட்டினிக்கெதிரான நிறுவனத்தினரால் கந்தரோடை கிராமசேவையாளர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்குத் தேவையான பழமரக்கன்றுகள், மண்வெட்டிகள் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளன. நாளை வெள்ளிக்கிழமை காலை கந்தரோடைக் கிராமசேவையாளர் காரியாலயத்தில் வைத்து 154 விவசாயிகளுக்கு மண்வெட்டிகளும், பழமரக் கன்றுகளும் வழங்கப்படும். (ஐ-152)

## கோழிக்குஞ்சு உற்பத்தி

சண்டிலிப்பாய், ஒக். 1

சண்டிலிப்பாய் கால்நடை வளர்ப்போர், கூட்டுறவுச் சங்கத்துக்கு அண்மையில் கிடைத்த கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம் மூலம் கோழிக்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

ஐ. நா. அபிவிருத்தித் திட்டப் பிரிவு சுமார் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரத்தை அண்மையில் வழங்கியிருந்தது.

கட்டுடையிலுள்ள மேற்படி சங்கத்தின் பண்ணையில் மறி ஆடுகளுக்குச் சினைப்படுத்தல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இப்பகுதி மக்கள் இதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் சங்கத் தலைவர் ச. செல்வரத்தினம் தெரிவித்தார். (இ-135)

## BOSCO INSTITUTE

பொது இரசாயனம்

By: அன்பழகன்

ஆரம்பம்: 01 - 10 - 98
Tue., Thu., 3 — 4

புலமைப் பரிசில் - 99

BOND வினாத்தாள்
ஒவ்வொரு ஞாயிறும்
8 — 10 பரீட்சை
நடைபெறும்.

[59547]

## தேவை

45 வயதிற்கு மேற்பட்ட பெண் மேற்பார்வையாளரும், பெண் சமையற்காரரும் உடன் தேவை.

15 — 10 — 98 ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவேண்டியமுகவரி:

விழிப்புல
வலுவிழந்தோர்
வாழ்வகம்

யாழ். வீதி,
நகரசபை மண்டபம்
அருகில்,
மானிப்பாய்.

[59535]

## தென்மராட்சி உயர் கல்வி நிலையம்

யாழ். பல்கலைக்கழகம், பேராதனை
[வெளிவாரி]

கலைத்தேர்வு பகுதி I மீண்டும் ஆரம்பம்
நாள்:- 04 - 10 - 98 (ஞாயிறு)

நிர்வாகி

இல: 5, சிவன் வீதி,
சாவகச்சேரி.

(59546)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 30 — 12 — 1941

விண்ணில் 12 — 10 — 1997

திருமதி

### தங்கலீலாவதி ஜெயச்சந்திரா

திதி: 01 - 10 - 1998

ஆண்டொன்று சென்றதம்மா
உங்கள் திருமுகம் கண்டு நாங்கள்
ஆறாத்துயரில் இருந்து அழுந்துகின்ற போது
ஆறுதல் தருவது யாரம்மா?

எம் இதயத்தில் என்றும் வீற்றிருக்கும் தெய்வமே! எப்பிறப்பில் இனி உங்களை நாம் காண்போம் எமை நல்வழியில் வளர்த்து ஆளாக்கிய தெய்வமே!

என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைவேண்டுகிறோம்.

கணவன், பிள்ளைகள்,
சகோதரிகள், பேரப்பிள்ளைகள்,
பெறாமகன், மருமகன்.

கொத்தியகாடு,
தொண்டமானாறு.
தற்போதய முகவரி:- வீரபத்திரர் கோயிலடி,
உடுப்பிட்டி.

(59347)

## முதலாண்டு நினைவில்



திருமதி

### பரமேஸ்வரி இராசேந்திரம்

தோற்றம் 03-01-1924

மறைவு: 12-10-1997

திதி: 01 - 10 - 1998

அத்தன் கழல்தனை நாடிய உந்தன்
ஆத்மா சாந்தி பெற்றிட வேண்டி
சித்தம் சிவனை போற்றியே நாளும்
சிந்தையில் உம்மை நினைக்கிறோமம்மா!

பிள்ளைகள், மருமக்கள்,
பேரர்கள்.

68, மருதடி வீதி,
யாழ்ப்பாணம்.

(59539)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சிறுவரும் முதியோரும்

இன்று உலக சிறுவர் தினமும் உலக முதியோர் நாளுமாகும். இவர்களில் முன்னவர்கள் குருத்தோலைகள் என்றும் பின்னவர் காவோலைகள் என்றும் வர்ணிக்கப்படுவர்.

இரு சாராருமே மனித சமுதாயத்தின் பிரிக்க முடியாத அங்கங்கள். சிறுவர்கள் இன்றைய பெற்றோர்களின் பிள்ளைகள். முதியோர்களின் பிள்ளைகளே இன்றைய பெற்றோர்கள்.

சிறுவர்கள் சமூகத்தின் நற்பிரஜைகளாக வளரவும் வளமான வாழ்வைப் பெறும் வகையில் கல்வி, பொருள், வீரச் செல்வங்களைத் தேடிக் கொள்ளவும் தர்மத்தின் வழி நிற்கவும் பயிற்றுவிக்கும் பொறுப்பு சிறியதல்ல; பாரியது.

சிறுவர்கள் எமதுபிள்ளைகளாக இருந்தாலும் கூட அவர்களுக்கென்று சுதந்திரம், உரிமைகள் பலவும் உண்டு. அவை முன்னரை விட இப்போது வெளிச்சத்துக்குக் கொண்டுவரப்பட்டு வலியுறுத்தப்படுகின்றன, சட்டத்தினால் பேணப்படுகின்றன.

ஒவ்வொரு தாய் தந்தையரும் தமது பிள்ளை திறமையாளனாக, பெருமைக்குரியவனாக, வளமும், புகழும் சேர்ந்து வாழ வேண்டும் என்று விரும்புவது இயல்பு. அந்த வழியே அவனை நடத்திச் சென்று இலக்கை எய்த ஓயாது, சலியாது உழைப்பதும் உண்டு.

தமது பிள்ளைகளின் வாழ்வு தாம் நினைத்தது போல அமைந்து அவர்கள் அவையில் முந்தியிருக்கக் கண்டும், சான்றோர்கள் எனக் கேட்டும் மகிழ்ச்சியுறும் பெற்றோர் பாக்கிய சாலிகள்.

ஆனால் அந்தப் பெற்றோரை அவர்களின் முதுமையில் பிள்ளைகள் ஆதரிக்கத் தவறக்கூடாது. முதியோர்களும் ஒரு வகையில் சிறுவர்களைப் போன்றவர்களே. தமது பிள்ளைகளின் ஆதரவையும் அன்பையும், அரவணைப்பையும் எதிர்பார்ப்பவர்கள். உடல் இயலாமையால் மட்டுமன்றி முதுமையில் மன இயல்பும் குழந்தைத்தனம் கொண்டதாகி விடுகிறது.

பெற்றோர்களை அவர்களின் முதுமைப் பருவத்தில் பேணிக் காத்து, அன்பு பாராட்டி, சீராட்டி ஆதரிக்கும் பண்பு எமது நீண்ட காலப்பாரம்பரியம்.

ஆனால் இன்று முதியவர்கள் தனித்து விடப்பட்டவர்களாக, தவிக்கவிடப்பட்டவர்களாக கஷ்டமுறுகின்றனர். வசதிகள் வாய்ப்புகள் உள்ள முதியவர்கள் பலர், அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கும் நிலை ஒரு புறம்; பராமரிப்போர் இன்றி உறவுகளை இழந்து துடிக்கும், துன்புறும் சாரார் மற்றொரு புறம். பழைய மரபு எங்கே புதிய புறங்கணித்தநிலை இங்கே என்று கூறுமளவுக்கு காலம் மாறுகிறது.

மேற்கு நாடுகளைப் போன்று முதியோர் நலன் புரி நிலையங்களும் இல்லங்களும் அதிக எண்ணிக்கையில் இங்கும் தேவைப்படப் போகின்றன. ஆகையால் முதியோர் நலன் பேணும் புதிய சமூகத் திட்டங்கள் குறித்து சிந்திக்க வேண்டிய காலம் வந்து விட்டது. சமூகப் பற்றுள்ளவர்கள் இப்போதே செயற்படத் தொடங்கட்டும்.

# சிறுவர்களின் உரிமைகளைப் பேணுவதில்
# சமூக மட்டத்தில் போதிய அக்கறை தேவை

**ஜெனோவா அல்பிரட் (LL. B)**

சிறுவர்களைப் பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளைப் பேணுதல், என்பன ஒரு நாட்டினது தேசிய விடயம் மாத்திரமல்ல அது சர்வதேச சமூகத்தின் ஒரு சட்டரீதியான அக்கறை என்ற அளவுக்கு இன்று சிறுவர்கள் பக்கம் முழு உலகத்தின் பார்வையும் திரும்பியுள்ளது.

ஐ. நா. சபை தொடக்கம், அனைத்து சர்வதேச, அரசு சார்பற்ற நிறுவனங்கள் வரையும்; மத நிறுவனங்கள் தொட்டு, உள்ளூர் மனித முன்னேற்ற நிறுவனங்கள், அரச தாபனங்கள் என இவை அனைத்தும் சிறுவர்கள் பற்றிய தங்கள் கவனத்தை ஒரு முகப்படுத்தியுள்ளமையை இன்று நாம் காண்கின்றோம்.

சிறுவர்கள் மென்மையானவர்கள், மற்றவர்களில் தங்கியிருப்பவர்கள், நம்பிக்கையுடன் இயங்கும் சுறுசுறுப்பான சுபாவமுடையவர்கள், வருங்கால சமுதாயத்தின் வித்துக்கள், சுடமதிறவர்கள். இவர்களின் இன்றைய நிலையோ கவலைக்கிடமாக உள்ளது. இன்று ஒவ்வொரு நாளும் உலகில் எண்ணிலடங்காச் சிறுவர்கள் தமது வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் தடையாக உள்ள எத்தனையோ ஆபத்துக்களை எதிர் நோக்குகின்றனர். போரினாலும் வன்முறையாலும் பாதிப்புறுவது மட்டுமல்ல, இன ஒடுக்குமுறை, நிறப்பாகுபாடு, ஆக்கிரமிப்பு, அந்நிய ஆதிக்கம், தகாத ஊடுருவல், அகதி நிலை; இடம் பெயர்வு, புறக்கணிப்பு, கொடுமை, பாலியல் துஷ்பிரயோகம், வறுமை, பொருளாதார நெருக்கடி, போஷாக்கின்மை, கொள்ளை நோய் போன்றவற்றினாலும் மிகவும் துன்பப்படுகின்றார்கள்.

**இன்று உலகச்சிறுவர் தினம்**

ஒருபக்கம் மனித வாழ்வை மேம்படுத்தும் அரிய விஞ்ஞான வளர்ச்சியின் உச்சப் படிக்கட்டில் நின்றுகொண்டு நவீன யுகத்தில் இருந்து, அணுயுத்தத்தில் நின்று கணனியுகத்தில்காலபதித்து, 21 ஆம் நூற்றாண்டின் நுழைவாயிலை அடையும் இத்தருணத்தில் கூட வளரும் பிஞ்சுகள் முளையிலேயே கருக்கப்படுகின்றன.

உலகில், முக்கியமாக, மூன்றாம் உலக நாடுகளிலும், வளர்முக நாடுகளிலும் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்த முரண்பாட்டின் காரணமாகவும், பொருளாதாரச் சீர்கேட்டினாலும் இலட்சக் கணக்கான சிறுவர்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

### 9 லட்சம் சிறுவர் நேரடிப் பாதிப்பு

நமது மண்ணில், குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் கிட்டத்தட்ட 9,09,000 சிறுவர்கள்போரினால் நேரடியாகவும், மற்றும் இலட்சக் கணக்கானோர் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றார்கள்.

கிறேஷ் மாரிசல் கூறுவது போல "எதையுமே விட்டு வைக்காத, புனிதமாகக் கருதாத, பாதுகாக்க நினைக்காத, யுத்த அரக்கத் தனமும், ஆயுத மோதலும் உலகில் கோடிக்கணக்கான சிறுவர்களின் வாழ்க்கையையே மாற்றியமைத்துள்ளது." இது இன்று எமது மண்ணிலும் யதார்த்தமாகும் ஓர் உண்மை. கடந்த பத்து ஆண்டுகளுக்குள் மாத்திரம் உலகில் பத்து இலட்சம் சிறுவர்கள் ஆயுத மோதலில் கொல்லப்பட்டிருக்கின்றார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன.

**வடக்கு - கிழக்கில் 9 லட்சம் சிறுவர் போரினால் நேரடியாகப் பாதிப்பு**

எந்தச் சூழ்நிலையிலும், அது யுத்தச் சூழ்நிலையாக இருந்தாலும் சரி, வேறு சூழ்நிலையாக இருந்தாலும் சரி சிறுவர்களைத் தாயிடமிருந்து பிரிக்கக் கூடாது என்றே இன்றைய சமூக நலன் விரும்பிகளும், உளவியல் நிபுணர்களும கூறுகின்றார்கள், ஆனால் இலங்கையில் 2,00,000க்கும் 3,00,000க்கும் இடைப்பட பிள்ளைகள், தாய்மார் வெளிநாட்டில் வேலை பார்க்கச் சென்ற காரணத்தால் தனித்து விடப்பட்டு, துஷ்பிரயோகத்திற்கும், சுரண்டலுக்கும் ஆளாகப்பட்டிருக்கும் துர்ப்பாக்கியமான நிலையைக் காண்கின்றோம்.

அடுத்து, சிறுவர்கள் எதிர் நோக்கும் இன்றைய மிகப் பயங்கரமான பேர்வழிகள் "குழந்தைளை விரும்பிகள்" எனப்படுவோரின் கொடுமையாகும், சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு அவர்களை அறியாமலே ஆட்படுத்தும் சிறுவர் பாலியல் இச்சையாளர்களான இவர்களால் எமது நாட்டிலேயே பெரும் எண்ணிக்கையான சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

### ஆற்றலை இழக்கும் ஆபத்து

வடக்கு— கிழக்கில் கடந்த 15 வருட கால யுத்த நெருக்கீட்டின் பிரதிபலிப்புக்களை எத்தனையோ ஆண், பெண்; சிறுவர்களின் நடத்தைகளில் இருந்து காணக்கூடியதாக இருக்கின்றது. அவர்களின் பய உணர்வு, பதகளிப்பான நடத்தை, ஆற்றல்களை இழக்கும் போக்கு, பயங்கர கனவுகள், நித்திரைக் குழப்பம், மனச்சோர்வு, ஒதுங்கியிருத்தல், கிளர்ச்சி செய்தல், இவையெல்லாம் யுத்த நெருக்கீட்டில் நம் சிறுவர்களைத் தாக்கி விட்ட பூதாகரமான விளைவுகள்.

இன்னும் இங்கு அடிக்கடி நிகழும் இடம்பெயர்வினால் வாழ்க்கை முறையில் ஏற்படும் குழப்பம்; பழகிய சூழலில் இருந்து புதிய சூழலுக்கு வந்ததால் சிறுவர்களின் மன நிலையில் ஏற்படும் ஒரு தனிமை உணர்வு, வெறுப்புணர்ச்சி இவை அனைத்தும் இந்த மண்ணில் சிறுவர் நலனை முன் வைத்து இயங்கும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்துக்கும் சவாலாகவே அமைகின்றன.

### சிறுவயதில் தொழில்

இன்னும் உலகில் சுமார் 25 கோடி சிறுவர்கள் படிக்க வேண்டிய வயதில் உழைக்க நிர்பந்திக்கப்பட்டுள்ளார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 1994 ஆம் ஆண்டுக் கணிப்பின்படி இலங்கையில் சுமார் 500.000 சிறுவர்கள் வீட்டுவேலைக்காரர்களாக பணிபுரிகின்றார்கள் எனத் தரவுகள் கூறுகின்றன.

இன்னும் சிறுவர்கள் தங்கள் சொந்த வீட்டிலேயே, தங்கள் தாய் தந்தையரால் படிப்பை நிறுத்தி வேலைக்கு அனுப்பப்பட்டிருக்கும் துர்பாக்கியமான நிலையையும் காணமுடிகின்றது. இதற்கு வறுமை ஒரு காரணமாகக் கூறப்படுகின்றது, ஆனால் வறுமையைச் சாட்டாக வைத்து ஒரு சிறுவனினதோ, சிறுமியினதோ உரிமையை பறிக்க, களவாட, அவர்களது எதிர்காலத்தை பாழடிக்க எவருக்கும் உரிமை இல்லை என்று இன்றைய சிறுவர்களின் உரிமைச் சாசனம் அவர்களுக்காக குரல் கொடுக்கின்றது.

வறுமையைப் போக்க சிறுவர்களும் உழைக்கத்தான் வேண்டுமென்பதும்,இன்றேல் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும்என்பதும் ஒரு நிரந்தரத் தீர்வாக அமைய முடியாது. ஏன்? இன்று உலகிலும், இங்கும் போர் நடந்து கொண்டிருப்பது கூட உணவுக்காக அல்ல உரிமைக்காகத்தான் என்று கூறப்படுவதையாவது இவர்கள் உணரவேண்டும்.

சிறுவர் ஊழியத்தை உலகில் முற்றாகவே ஒழிக்க வேண்டும் என்ற காரணத்தால் அமெரிக்கா சிறுவர் ஊழியத்தினூடாக உருவாக்கப்படும் எந்தப் பொருளும் அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படக் கூடாது என்று கடந்த 1997 ஒக்டோபரில் ஒரு சட்டத்தை உருவாக்கியுள்ளது.

### விழிப்புணர்வுப் பிரசாரம்

தற்போது இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் சிறுவர் உரிமை விழிப்புணர்வுப் பிரசாரத்தின் தாக்கத்தினால், அரசாங்கம் 5 வயதிற்கும் 14 வயதிற்கும் உட்பட்ட சிறுவர்கள் கட்டாயமாக பாடசாலைகளுக்கு அனுப்பப்படல் வேண்டும் என்று "கட்டாயக்கல்வி" சட்டமாக்கப்பட்டிருக்கின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

இன்னும் இலங்கையின் சட்ட திட்டங்கள் சிறுவர் உரிமையைப் பொறுத்த வரையில் நூறாண்டுப் பழைமையைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன.

"சிறுவர் துஷ்பிரயோகம்" சம்பந்தமாக இலங்கையின் குற்றவியல் கோவையின் சில விதிகள் குறிப்பிட்டாலும் கூட, காலத்தின் தேவை கருதி சிறுவர்கள் சம்பந்தப்பட்ட குற்றவியல் சட்டங்களில் சிலமாற்றங்கள் தேவைப்படுகின்றன.

இங்கு குற்றவியல் பொறுப்பின் ஆரம்ப வயது எட்டாக இருப்பது நியாயமானதா என்பது மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும். பெல்ஜியம்,ஸ்பெயின், போர்த்துக்கல், கியூபா, ஆர்ஜன்ரீனா போன்ற நாடுகளில் இப்பொறுப்பு 17, 18 வயதில் இருந்தே கணிக்கப்படுகின்றது. நாமோ இனனும் காலனித்துவ ஆட்சியின பழைய சட்டங்களுக்கே வக்காலத்து வாங்குகின்றோம்.

இன்று உலகின் பல நாடுகளின் சிறுவர் குற்றங்களை விசாரிப்பதற்கென்றே தனியான "பால்ய நீதி மன்று" உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறன நீதி மன்றங்கள் இலங்கையிலும் சிறுவர் குற்றங்களை விசாரிப்பதற்கென உருவாக்கப்பட வேண்டும் என்பதைசட்ட வல்லுநர்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்வார்கள்.

அதே போன்று பாலியல் வன்முறைக்கு (Gender Pased Voitence) பலியான ஒரு 16 வயதுச் சிறுமி கர்ப்பவதியானால், கருவழிப்புத் தடைச் சட்டத்தில் இருந்து அவளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். வன்முறைக்கு ஆளாகி, உடலும், உள்ளமும் பாதிக்கப்பட்ட அந்தச் சிறுமியின் வயிற்றில் வளரும் வேண்டாத கருவினால் அவள் மென் மேலும் உளத்தாக்கத்துக்கு ஆளாகி விடுவாள் என்பது மறுக்க முடியாத உண்மை.

அடுத்து முன்பள்ளிகள் விடயத்தில் அரசாங்கம் காட்டும் பாராமுக மனப்பான்மை இன்று வரையும் தனிப்பட்ட நிறுவனங்களே முன் பள்ளிகளை நடத்துகின்றன. அரசாங்கம் முன்பள்ளிகளை ஏற்று நடத்த முன் வருமாயின் அதன் நோக்கமும், இலட்சியமும் நாடு முழுவதும் உள்ள சிறுவர்களுக்கு கிடைக்க வாய்ப்புண்டாகும்.

(9 ஆம் பக்கம் பார்க்க)

## சாயி சிந்தனை

ஓர் ஆன்மீக சாதகன் முதலில் மற்றவரை மன்னிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். உண்மையிலே உன்னில் யாரும் உனக்குத் தீங்கு செய்ய முடியாது.

உன் கர்ம வினையே மற்றவர் மூலம் உனக்குத் திரும்பக் கிடைக்கிறது.

இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றாலோ அன்றி ஒப்புக் கொள்ள மறுத்தாலோ கூடப் பரவாயில்லை. ஆன்மீக சாதகன் முதலில் தவறு செய்யும் தன் குழந்தையை மன்னிப்பது போன்ற கருணையுடன் மற்றவர்களையும் மன்னிக்கக் கற்றுக் கொள்ளட்டும்.

— பாபா

## நாளை

புரட்டாதி - 16

வெள்ளிக்கிழமை

திதி: ஏகாதசி
முற்பகல்: 09.30 வரை.

நட்சத்திரம்: அவிட்டம்
பின்னிரவு 03.19 வரை.
ஏகாதசி விரதம்

சுபநேரம்: 06.02 - 07.32

ராகுகாலம்: 10.32 - 12.02

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

## உதயவாக்கு

எல்லா நல்ல காரியமும் பேச்சும் பணம் பெறாமல் செய்யப்பட வேண்டும் என்பதே நல்லோர் எண்ணம்.

- ரஸ்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயக்க மருந்து, கத்தி, அலவாங்குடன் கொள்ளைக் கோஷ்டி நபர் பிடிபட்டார்

## சுண்டிக்குளி பகுதியில் சம்பவம்

அரியாலை, ஒக். 1

சுண்டுக்குளி, கொழும்புத்துறை, ஈச்சமோட்டைப் பகுதிகளில் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் கோஷ்டி ஒன்றின் தலைவர் பொதுமக்களிடம் சிக்கினார்.

சுண்டுக்குளி குருசோ வீதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்று முன்தினம் இரவு ஊரடங்கு வேளையில் கொள்ளையிட முயன்றபோதே இவர் அப்பகுதி மக்களிடம் சிக்கினார்.

பத்துக்கும் மேற்பட்டவர்களைக் கொண்ட கோஷ்டி ஒன்று இரவு 11மணியளவில் அந்த வீட்டுக்குள் நுழைய முயன்றது. அச்சமயம் வீட்டுக்காரரும், அயலவர்களும் விழிப்படைந்து அவர்களின் முயற்சியை முறியடித்தனர். இதனால் அக்கோஷ்டியைச் சேர்ந்த பலர் தப்பியோடினர். அச்சமயம் தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்ப முறன்ற போதே மேற்படி நபரை பொதுமக்கள் வளைத்துப் பிடித்தனர். அவரது சைக்கிளில் இருந்து அலவாங்கு, கத்தி மற்றும் மயக்கத்தை ஏற்படுத்துவது எனச் சந்தேகிக்கப்படும் மருந்துடன் கூடிய விசுறு கருவி (ஸ்பிறே) என்பன மீட்கப்பட்டன. அவரது இடுப்பில் இருந்து கிறிஸ்கத்தி ஒன்றும் பறிக்கப்பட்டது.

பொதுமக்களால் பிடிக்கப்பட்ட அந்த நபர் பி.பத்மஸ்ரீ (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வீடுகளில் திருடும் கோஷ்டிக்கு தலைமை வகிப்பதாகவும், பல கொள்ளைச் சம்பவங்களில் தான் தொடர்பு கொண்டிருந்ததாகவும் அந்த நபர் மக்கள் முன்னிலையில் ஒப்புக் கொண்டார்.

தான் புங்கன்குளம் வீதியில் முன்னர் வசித்து வந்ததாகவும் அந்த நபர் தெரிவித்தார். பின்னர் அவர் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ-17)

# பருத்தித்துறைபகுதிக்கான மின் தடைப்பட்டுள்ளது

வடமராட்சி ஒக். 1

பருத்தித்துறை, புலோலிப் பகுதிகளுக்கான மின் விநியோகம் கடந்த ஒரு மாத காலமாகத் தடைப்பட்டுள்ளது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கவென பருத்தித்துறை போக்குவரத்துச் சபை டிப்போவில் நிறுவப்பட்டுள்ள பிரிட்டிஷ் அரசால் வழங்கப்பட்ட 250 கே.வி ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதையடுத்தே மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

பழுதடைந்த ஜெனரேட்டரைத் திருத்துவதற்கு இலங்கை மின்சாரசபை இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டதாகத் தெரியவரவில்லை. (ஐ-173)

# தெல்லிப்பழைப் பகுதியில் வாந்திபேதி பரவும் ஆபத்து

## தேநீர்க்கடைகள் மூடப்பட்டன

வலி. வடக்கு, ஒக். 1

தெல்லிப்பழையில் வாந்திபேதி பரவும் அறிகுறிகள் தென்பட்டதை அடுத்து மல்லாகம் சந்தியில் உள்ள தேநீர், குளிர்பானக் கடைகள் அனைத்தும் சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனையின் பேரில் மூடப்பட்டுள்ளன.

வன்னியில் இருந்து திரும்பி குளமங்கால் பகுதியில் வசிக்கும் சிலருக்கு வாந்திபேதி ஏற்பட்டிருக்கிறது. அதனை அடுத்தே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இக் கடைகள் மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

தேநீர் மற்றும் குளிர்பானக் கடைகள் சில தினங்களாக மூடிப்பட்டிருப்பதால் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்கள் சுடுநீர் மற்றும் அவசர பொருள்களைப் பெறுவதில் சிரமப்படவேண்டி இருப்பதாகத் தெரிவித்தனர்.

# நீர்வேலி, இருபாலையில் நெல் விதைப்பு மும்முரம்

நீர்வேலி, இருபாலை ஆகிய பகுதிகளில் உள்ள நெல் வயல் நிலங்கள் பெரும்போகச் செய்கையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை விவசாயிகள் மும்முரமாகச் செய்து வருகின்றனர். கடந்த சில நாள்களாக இப்பகுதியில் போதியளவு மழை பொழிந்துள்ளதனால் இது சாத்தியமாகியுள்ளது.

முதலாவது உழவு ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள பள்ளமான இடங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு அங்கே முதலில் நெல் விதைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது. தொடர்ந்து அதிக மழை பொழிந்து நீர் நிரம்பி விட்டால் விதைக்க முடியாத நிலை ஏற்படும் என்பதனாலேயே இவ்வாறு முன்னுரிமை அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-154)

## ஆண்டு- 9 மாணவருக்கான

# தொழில் நுட்பப் பாடம்; விண்ணப்பிக்க அறிவுத்து

வலிகாமம் தெற்கு ஒக். 1

ஆண்டு - 9 மணவர்களுக்கான தேசிய கனிஷ்ட தொழில்நுட்பப் பாடங்களுக்கான பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் கல்வி. உயர் கல்வி அமைச்சினால் கோரப்பட்டுள்ளன.

பரீட்சைத்திணைக்களத்தினால் விண்ணப்பப்படிவங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (ஐ-152)

# மாநகர ஊழியரின் மரண விசாரணைத் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ். மாநகர சபையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பான மரண விசாரணைகளில் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கைகளின் பிரகாரம் பொன். சிவபாலன், சு. பத்மநாதன், மா. ஈஸ்வரம், பொ. பத்மராஜா, மல்லிகா இராஜரத்தினம் ஆகியோரின் மரணங்கள் குண்டு வெடிப்பினால் உண்டாகிய காயங்களிலிருந்து ஏற்பட்ட அதிக இரத்தப் பெருக்கு மற்றும் அதிர்ச்சி காரணமாக ஏற்பட்டன என்று மரண விசாரணைகளின் பின்னர் தெரிவித்த யாழ். மேலதிக நீதிவான் எஸ்.ஏ.ச. ஏகநாதன் இக்குண்டு வெடிப்பு தொடர்பாக மேலதிகவிசாரணையை மேற்கொள்ளுமாறு யாழ். பொலீஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் குண்டு வெடிப்பில் மரணமான பொலீஸ் மற்றும் படை அதிகாரிகளின் மரணம் தொடர்பாக கொழும்பில் நடத்தப்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கைகளையும் மரண விசாரணைப் பதிவேடுகள் அடங்கிய பதிவேடுகளையும் பெற்று இந் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் பொலீஸ் பரிசோதகர் ஞானரத்தினாவுக்கு பணிப்புரை வழங்கினார்.

இவ்வழக்கு இம்மாதம் [illegible] திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-5)

## சிறுவர்...

(ஏழாம் பக்கத் தொடர்)

*சமூகமாற்றத்துக்குஉதவும்*

இன்று நாம் மிக அவதானமாக உணர வேண்டிய விடயம் ஒன்றுண்டு. 'சிறுவர் உரிமை' என்பது ஏதோ அரசியல் வாதிகளின் பசப்பு வார்த்தைக்குள்ளோ, அன்றேல் சிறுவர்களை இலக்காக வைத்துக் காட்டப்படும் பரிவு, இரக்கம் என்பவற்றினுள் அடங்கும் ஓர் உபயமோ அல்ல. இது சமூக மாற்றத்திற்கான ஒரு நடவடிக்கை.

உலகின் புத்தி ஜீவிகளாலும், 190 -க்கு மேற்பட்ட நாட்டுத் தலைவர்களாலும், பல்வேறு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆலோசனையாலும், குரலற்ற சிறுவர்களுக்காக உலகின் மாபெரும் நிறுவனமாகிய ஐ. நா. சபையினூடாக எழுந்த ஒரு வலிமை மிக்க குரலே (Voice for the Voiceless) இச்சிறுவர் உரிமைச்சாசனம்.

இதன் எதிரொலியே இலங்கையில் உருவான 'சிறுவர் உரிமை பட்டயம்', மற்றும் அண்மையில் (4 - 8 - 98 இல்) சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்புச் சபை சட்டவரைபு என்பன.

இச்சிறுவர் உரிமைச் சாசனம் அதனை ஏற்றுக்கொண்ட நாடுகள் அனைத்தையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பது மாத்திரமன்றி, சிறுவர் சம்பந்தப்பட்ட, சர்வதேச உள்ளூர் நிறுவனங்கள், மற்றும் பலபொதுநல ஸ்தாபனங்கள் அனைத்தும்இந்தவிடயத்தில் கண்காணிப்பாளர்களாகச் செயற்பட்டு வருகின்றன. சிறுவர்களின் உரிமைகள் மீறப்படும் பொழுதும், துஷ்பிரயோகம் செய்யப்படும் பொழுதும் தட்டிக் கேட்கவும், கண்டிக்கவும். அதுசம்பந்தமாக ஒரு பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கவும் இன்று பணியாற்றுகின்றன.

எமது நாடுகளின் சம்பிரதாயம், சடங்கு, பண்பாடு, குடும்ப வழக்கு, வறுமை என்ற சில காரணிகள் சிறுவர் உரிமையின் அமுலாக்க முயற்சிக்கு சவாலாக அமையலாம் என்று எதிர்பார்க்கப்படுவதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஆயினும் இவற்றுக்காக சிறுவர்களின் பிறப்போடிணைந்த, பராதீனப்படுத்த முடியாத சம உரிமைகள் தாரைவார்க்கப்பட முடியாதவையாகும்.

உலகின் எதிர்காலம் இன்றைய சிறுவர்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. அவர்கள் பாதுகாப்பாக உயிர் வாழவும் அனைத்து விடயங்களிலும் பங்கேற்று முன்னேறவும் அவர்களுக்கு உரித்தான அந்த உரிமைகளை மதித்துப் பேணி ஒளிமய [illegible] அவர்களை அழைத்துச் செல்வது எமது தலையாய கடமையாகும். ★

## வாசகர் திருமுகம்

# மட்டுவிலுக்கு மின்சாரம் கிடைக்குமா?

மட்டுவிலுக்கு மின்சாரம் வழங்கப்படுமா? என்ற கேள்வி எல்லோரிடமிருந்தும் எழும்புகிறது. ஆனால் அதற்கு விடை கிடைத்தபாடில்லை. யாழ். குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக வலிகாமம் பகுதிக்கு இருபத்துநான்கு மணி நேரமும் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. ஆனால் மட்டுவிலுக்கு இது வரை காலமும் மின்சாரம் வழங்கப்படவில்லை.

சாவகச்சேரியில் உள்ள ஜெனரேற்றர் மூலம் கல்வயல் வரைக்கும் மின் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் மட்டுவில் பகுதிக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. வேறு இடங்களுக்கு புதிதாக மின் கம்பங்கள் நடப்பட்டு மின் விநியோகம் நடைபெறுகிறது. மட்டுவிலுக்கும் இதே போல் மின்கம்பங்களை நாட்டி மின் விநியோகம் செய்து மக்களின் அவலத்தைப் போக்குவார்களா?

சம்பந்தப்பட்ட மின்சார சபை அதிகாரிகள் கவனம் எடுப்பார்களா?

ஆ. யசோதன்.

மட்டுவில்.

# ஆசிரியர் இடருதவிக் கடன்

ஆசிரியர் இடருதவிக் கடனுக்கு விண்ணப்பித்து எத்தனையோ மாதங்களாகியும் அதைப்பற்றி ஓர் அறிவித்ததுமில்லை. ஆசிரியர்கள் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இடம்பெயர்ந்து வந்து தம்மிடமிருந்த நகைகளை விற்று, அடகு வைத்து தமது சீவியத்தை நடத்தினார்கள் இக் கஷ்டங்களை ஈடு செய்வதற்காக இக் கடனுக்கு விண்ணப்பித்து காத்திருந்தது தான் மிச்சம்.

எனவே காலந் தாழ்த்தாது இக்கடனை வழங்குவதற்கு பொறுப்பாக உள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

சு. பரமேஸ்வரன்.

# தரமற்ற பொருள்களும் யாழ்ப்பாணத்தவரும்

யாழ்ப்பாணத்தில் தரங்கெட்ட பொருள்களும், காலாவதியான பொருள்களும் விற்கப்படுவது தண்டிக்கப்பட வேண்டியது என "உதயன்" ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்ட விடயத்தை கொழும்புத்துறை மு. கனகசபை அவர்கள் உணவுப் பொருள்களைச் சாட்டாக வைத்துக் கொண்டு சீனாவின் உற்பத்திப் பொருள்கள் யாழ்ப்பாணத்தில் விற்கப்படுவதும் யாழ்ப்பாணத்தை ஒரு குப்பைத் தொட்டியாக மதிக்கும் செயல் என எழுதி இருந்தார்.

அவர் அவைகளை குறைகூறும் பாணி உண்மையிலேயே வாசித்துப் பார்க்கும் போது பெரும் ஜோக்காகவே இருந்தது.

அவருக்கு சீனப் பொருள்களிலும் சீமைப் பொருள்கள் மிகப் பிடித்தமாக இருந்ததை அவருடைய விமர்சனத்தில் இருந்து அறிய முடிந்தது. அப்படியானால் அவர் போன்றோர் சீமைக்குச் சென்று விடுவதுதான் நல்லது.

இன்று யாழ். மக்கள் குறைந்த விலைகளில் உள்ள பொருள்களையே வாங்கி பாவிக்கக்கூடிய நிலையில் உள்ளார்கள். உதாரணமாக எவரெடி ரோச் லைற் (தாய்வான் தயாரிப்பு அல்லது சீமை தயாரிப்பு) 250/- ஒரு சீனாதி தயாரிப்பு ரோச் 50/- திறந்த பொருளாரச் சந்தையில் சீமைப் பொருள்கள் யாழ். வருவதற்கு தடை இல்லை.

முடியுமானால் அவரை போன்ற சிலர் மொத்த வியாபாரிகளைச் சந்தித்தால் காரியம் சித்திக்கலாம். ஆனால் அவர்களைப் போன்ற பணக்காரர்கள் இப்போது யாழ்ப்பாணத்தில் குறைவு.

திறந்த பொருளாதாரக் கொள்கையினால் என்னென்னவோ எல்லாம் அழித்தொழிக்கப்பட்டு அடிச்சுவடற்று அள்ளிச்செல்லப்பட்டு விட்டன. வரலாற்றுச் சூழல்களைப் புரியாது யாழ்ப்பாணத்தில் இருந்து கண்ணீர்வடிப்பது பரிதாபத்திற்குரியதாகும். சொகுசு சீவியத்தில் உங்களுக்கு மட்டுமல்ல யாழ். மக்கள் அனேகருக்கும் பேரவா. அதனால் தான் எமக்கெல்லாம் இந்நிலையே.

ஒரு பொருளின் தரம், தொழில் நுணுக்கம், என்பனவே அவற்றின்விலையை நிர்ணயிப்பது என்பது யாவரும் அறிந்ததே.

நா. விஸ்வலிங்கம்

நவாலி தெற்கு,
மாணிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள ஆண் ஒருவர் தேவை. நேரில் வரவும்.

**த. சங்கரப்பிள்ளையும் மைந்தரும்**

21, மக்கள் நவீன சந்தை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(59558)

## இதய மலர்கள்

**உயர்திரு. வ. செல்வராசா**

கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம் - 4
பதவி உயர்வு பெற்ற ஞான்று
நண்பர் குழாம் அர்ச்சித்த இதய மலர்கள்.

ஆண்டினால் இளைய செல்வன்
அறிவினால் உயரும் அண்ணல்
ஆளுமை தவழும் செம்மல்
அன்புயர் தெய்விகம் வாழி வாழி!


நல்வித்தைப் பதவி சிறந்து வாழி
கல்விப்பயிர் உயர் செழித்து வாழி
சொல்விற்பனங்கள் சிறக்க வாழி!
எல்லையில் செல்வா வாழி இன்புடன் வாழி வாழி!

— நண்பர்கள்

அம்சன் ஒளியகம்,
நெல்லியடி.

(சி/5026)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணிலே | மண்ணோடு |
|---|---|
| 29 | 18 |
| — | — |
| 04 | 08 |
| — | — |
| 1979 | 1998 |

அமரர்

**பவளகாந்தன் விஷ்ணுராஜ்**

( வினோ )

01 – 10 – 1998

வெள்ளிச் சிரிப்போடு
துள்ளித் திரியும் பள்ளிப்பருவம்!
வண்ணக் கனவுகளோடு நெஞ்சிலே
என்ன நினைத்திருந்தாயோ?
சொல்லிக் கொள்ளவில்லை; காலன்
அள்ளிக் கொண்டுவிட்டான் உன் உயிரை!
பார்த்திருந்தோம் பாவிகளாய்
காத்துக்கொள்ள இயலவில்லை
கதறித் துடிப்பதைத் தவிர!
சேர்ந்திடுவோம் இன்னொரு நாளில்
உன்னோடு என்ற நிறைவில்!

- குடும்பத்தினர்.

உரும்பிராய்.

(சி/5032)

## பாதுகாவலர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 1

வடக்கில் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் உறுப்பினர்களின் பொதுக் கூட்டம் இன்று காலை 10.30 மணியளவில் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

(இ-3)

## பருத்தித்துறையில் பொருள் இறக்கம்

பருத்தித்துறை துறைமுகத்தில் 'வாதுவ்', 'மெக்ஸ்ஹண்டி' ஆகிய கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருகின்றன. அத்தியாவசிய உணவுப் பொருள்கள், கட்டடப் பொருள்கள் என்பன இக் கப்பல்களில் எடுத்து வரப்பட்டுள்ளன.

(ஐ-118)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 1

அராலி வடக்கு சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி சில்வர் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் தமது கழக மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 4. 15 மணிக்கு — ஆனைக்கோட்டை கலை ஒளி வி. க. 'பி' அணி எதிர் திருநெல்வேலி ஸ்ரீ அம்பாள் வி. க. அணி.

★ பிற்பகல்—5மணி அராலி மாவத்தை வி. க. பச்சை அணி எதிர் மூளாய் வளர்மதி வி. க. அணி.

(இ-3-4)

## ஹெலியிலிருந்து விழுந்த பொருள்கள்

வவுனியா, ஒக். 1

வவுனியா பகுதியில் பறந்து சென்ற ஹெலி ஒன்றில இருந்து வீழ்ந்த சிறிய இரும்புத் துண்டுகள் போன்ற சில பொருள்களால் வீடுகளுக்கு சிறு சேதம் ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

வன்னிப் போர் முனையில் மோதல்வெடித்ததை அடுத்து வவுனியா பகுதி வான் பரப்பில் ஹெலிகள் ஓயாமல் பறந்தபடி இருந்தன. அச் சமயம் கூசைப்பிள்ளைக் குளம் பகுதியில் ஒரு ஹெலியில் இருந்து சிறு பொருள்கள் வீடுகள் மீது வீழ்ந்தன. அதனால் வீடுகளின் கூரைப் பகுதியில் தீயில் எரிந்தது போன்ற சிறு சேதங்கள் ஏற்பட்டன. ஆள்கள் எவரும் இதனால் காயமடையவில்லை.

(ஐ-164)

## வேம்படி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம்.

**வருடாந்த பரிசளிப்பு விழா**

**1998**

காலம்: 02 - 10 - 1998 வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 9.30 மணி (இலங்கை நேரம்)

பிரதம விருந்தினர்கள்:
பேராசிரியர் R. குமாரவடிவேல்
பௌதிகவியற்றுறைத் தலைவர்,
யாழ். பல்கலைக்கழகம்.
திருமதி R. குமாரவடிவேல்

பெற்றோர், பழைய மாணவர், நலன்விரும்பிகள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள்.
வேம்படி மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/5029)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 | 12 |
| — | — |
| 01 | 10 |
| — | — |
| 1934 | 1997 |

**அமரர் P.K. பாலசிங்கம்**

(படியாதவன்)

(இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்) பாடவிதான அபிவிருத்தி நிலையம், கொழும்பு; கல்வி அமைச்சின் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர்)

"உங்கள் எதிர்காலச் சந்ததியினர் ஓர் உதாரண புருஷராக உங்களை என்றும் நினைவு கூரத்தகைமை பெற்ற உங்களின் வாழ்க்கையே எங்களின் உதய தாரகை"

மனைவி, மக்கள், மருமகன், பேரன்,
சகோதர சகோதரிகள், மருமக்கள்.

'விதாலன சங்கரியா வளவு',
718, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(சி/5030)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் மதியபோசன அழைப்பும்



| மண்ணின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 29 | 02 |
| — | — |
| 08 | 09 |
| — | — |
| 1930 | 1998 |

திருமதி

**தூசைப்பிள்ளை மாக்கிறேற்**

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
அகத்துறந்த தெய்வம்

எம் அன்பு அம்மாவின் இறுதிப் பிரியாவிடைச் சடங்குகளில் பங்குபற்றி எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிதனைக் கூறுகின்றோம்.

அத்தோடு நாளை (02-10-1998) காலை புதிய நேரம் 11.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியிலும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள்,
மருமக்கள்,

அருட்திரு அல்றின் (அ.ம.தி.) பேரப்பிள்ளைகள்.
372, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.

(59562)

உ

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் புரட்டாதி மாதம் 15 ஆம் நாள் (1-10-98) வியாழக்கிழமை காலை 9.02 மணிமுதல் 9.50 மணிவரை வரும் சித்தயோகம் கூடிய சுப முகூர்த்த வேளையில் வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமியின் துணை கொண்டு

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள

**மாருதி ரெக்ஸ்**

என்னும் வியாபார ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்தவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து எமது ஸ்தாபனத்தை ஆசீர்வதித்து ஊக்குவிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
குமாரசாமி குடும்பத்தினர்

MARUTHI TEX,
(READYMADE SHOW ROOM)
இல- 1, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்-

(சி/5031)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செஞ்சிலுவைக்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒப்புக்கொண்டன.

கடந்த ஞாயிறு, திங்கட் கிழமைகளில் கிளிநொச்சி, பரந்தன் முன்னணி காவலரண்களை ஊடறுத்து விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களின் போது இவர்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சடலங்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மல்லாவி அலுவலக அதிகாரியிடம் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் ஒப்படைத்தார்.

மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலயத்தில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இச்சடலங்கள் உரிய மரியாதைகளுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அதே சமயம் இந்தச் சண்டையில் இறந்த இராணுவ வீரர்களின் 400 சடலங்கள் ஏற்கனவே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவால் ஒப்படைக்கப் பட்டுள்ளன என்று இலங்கை வானொலி நேற்றிரவு தெரிவித்தது.

அதேசமயம்— மற்றொரு தொகுதியாக நல்லநிலையில் உள்ள 100 படையினரின் சடலங்களை இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்க இருப்பதாகவும்—

மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்த படையினரின் 100 சடலங்கள் உரிய மரியாதைகளுடன் நேற்று தகனஞ் செய்யப்பட்டன என்றும்— விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர் எனத் தெரிய வந்தது.

இதற்கிடையில் 600 சடலங்கள் விடுதலைப் புலிகளால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டதாக வெளியான தகவல் குறித்து இராணுவ அதிகாரி ஒருவர் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில், படையினரின் சடலங்கள் என்று கூறி விடுதலைப் புலிகள் ஒப்படைக்கும் சடலங்கள் அத்தனையும் படையினருடையதாக இருப்பதில்லை என்று கூறினார்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவால் ஒப்படைக்கப்படும் சடலங்களில் படையினரின் சடலங்கள் இனங்காணப்பட்டு அவை மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அந்த அதிகாரி சொன்னார்.

(இ-6-3)

## 400க்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

உயிரிழந்துள்ளனர் என ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

அவர்களில் 89 பேர் மட்டக்களப்பையும், 49 பேர் புலனாய்வுப் பிரிவையும், 55 பேர் பெண் புலிகள் பிரிவையும், 42 பேர் வவுனியா பிரிவையும், 55 பேர் விசேட உளவுப் பிரிவையும், 37 பேர் விசேட நடவடிக்கைப் பிரிவையும் சேர்ந்தவர்கள்—இப்படி அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது.

(இ-3)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேநேரம்—மாங்குளம் நகரை இராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 27 உறுப்பினர்கள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்ததாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அதேவேளை — நேற்று முனதினம் புதிய நகர்வை ஆரம்பித்த "வெற்றி உறுதி" துருப்பினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மாங்குளம் சந்திப் பகுதியில் கடுஞ் சண்டை தொடர்வதாக விடுதலைப் புலிகள் நேற்றிரவு அறிவித்தனர்.

இந்தச் சண்டையில் 62 படையினர் உயிரிழந்தனர் என்றும்—

100க்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என்றும்— பலாலி தலைமையகம் நேற்றிரவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்தது.

பாதுகாப்புப் படையினர் அதில் 41 புலிகளின் சடலங்களைக் கைப்பற்றியதாகவும்— 33 ஆயுதங்களையும் கைப்பற்றியதாகவும்—அதில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

## எமது ஆலோசனை..,

(முதலாம் பக்கத் தொடர்)

பயணிகளுடன் காணாமற் போயுள்ளது.

இந்தச் சம்பவம் புலிகளால் திட்டமிடப்பட்ட செயலாக இருக்கலாமென நாம் சந்தேகிக்கின்றோம்.

ஏனெனில் பலாலி—இரத்மலானை விமான சேவைகளை நடத்தும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு, சேவையை நடக்கவேண்டாமென அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது யாவரும் அறிந்ததே.

இந்த விடயமாக ஏற்கனவே அதாவது 25 ஆம் திகதி எமது உப தலைவர் என். மாணிக்கதாசன் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைத்திருந்த அறிக்கையில், பலாலி — கொழும்பு விமான சேவையின் பாதையை மாற்றிக் கடற்திசையில் விமானங்களைச் சேவையில் ஈடுபடுத்துமாறும் —

தற்போதைய பாதையில் மன்னாரைத் தாண்டிய பின்னர் கற்பிட்டி, முள்ளிக்குளம் குதிரைமலை போன்ற பிரதேசங்களில் நின்று புலிகளால் வெகு இலகுவாக விமானங்களைத் தாக்கமுடியும் என்றும் —

எனவே உடனடியாக இந்தப் பகுதிகளுக்கு மேலாக விமானங்கள் சேவையில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும் என்றும் — குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் பாதுகாப்பு அமைச்சோ, அரசாங்கமோ இந்த விடயத்தில் எதுவித கவனமும் செலுத்தவில்லை என்பது பயணிகளை ஏற்றி வந்த விமானம் காணாமற் போயுள்ளதில் இருந்து நிரூபணமாகின்றது.

அரச படைகளுக்கு எதிராக போர் நடத்துகின்றோம் என்று கூறிக்கொண்டு புலிகள் யாழ்ப்பாணத்தில் முழுக்க முழுக்கப் பொது மக்களின் அத்தியாவசிய தேவை கருதி ஈடுபட்டிருந்த விமானத்தை தாக்கியிருப்பின் இது மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியாதகும். அதேசமயம் யாழ். மக்களின் குறைந்த பட்ச அத்தியாவசிய தேவை கூட பூர்த்தி செய்யப்படுவதைப் புலிகளால் ஜீரணிக்க முடியாத பொறுப்பற்ற விஷமத்தனமான செயல் இதுஎன்றே கூற வேண்டியுள்ளது.

இதேவேளை அரசாங்கமானது பொதுமக்கள் விடயத்தில் மேற்கொள்ளும் சில நடவடிக்கைகளில் எமது கருத்துக்களுக்கோ அல்லது ஆலோசனைகளுக்கோ ஒருபோதும்செவிசாய்ப்பதில்லை அவ்வாறு கவனமெடுத்து செயற்பட்டிருந்தால் ஒரு வேளை இவ்வாறான அசம்பாவிதங்களைத் தவிர்த்து இருக்கலாம் எனவே எதிர்காலத்தில் பாதுகாப்பு விடயங்களில் எமது கருத்து, ஆலோசனைகளையும் கவனத்தில் எடுக்கவேண்டும்.

தமது மக்களையே கேடயமாக்கி, பலியாக்கி நடத்தப்படுகின்ற எந்தப் போராட்டமும் [illegible] வெற்றி [illegible]பவித்ததாக வரலாறு இல்லை. இதனை யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு தரப்பினரும் கருத்தில் கொள்ள வேண்டும்—

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காணாமற்போன...

(முதலாம் பக்கத் தொடர்)

இதுதொடர்பாக மன்னார் செயலக அதிகாரிகள் தெரிவித்த விவரம் வருமாறு:

மன்னாரில் இருந்து 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இரணைதீவுக்கும், 25 கிலோமீற்றர் தூரத்திலுள்ள நாச்சிக்குடாவுக்கும் இடைப்பட்ட பகுதியில் பேசாலைப் பகுதி மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அச்சமயம் வானில் வந்த விமானம் ஒன்று தலைகுத்திய படி — கரையில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் — கடலுக்குள் விழுவதைக் கண்டதாக அந்த மீனவர்கள் நேற்று மாலை எம்மிடம் தெரிவித்தனர்.

சுமார் 15 அடி ஆழமுள்ள பகுதியிலேயே விமானம் வீழ்ந்திருக்கலாம் என்றும் அந்த மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சம்பவம் நடந்ததைக் கண்டவுடன் பயத்துடன் மீன்பிடிப்பதைக் கைவிட்டு திரும்பியதாகவும்— அவர்கள் தெரிவித்தனர்.

உடனடியாக எடுத்த நடவடிக்கையின் பயனாக வங்காலைப் பகுதி தேவாலய மதகுரு ஒருவர் சம்பவ இடத்துக்குச் சென்றுள்ளார்.

மன்னார், வங்காலையைச் சேர்ந்தவர்களும், யாழ். பல்கலைக் கழக மாணவர்களுமான இருவரும் இந்த விமானத்தில் வந்ததால், அவர்களது உறவினர்களும் அந்த மதகுருவுடன் சேர்ந்து அங்கு சென்றுள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியாக அந்தப் பிரதேசம் அமைந்துள்ளதால் அவர்கள் உடனடியாகத் திரும்ப முடியாது. அவர்கள் இன்று மன்னார் திரும்பியதுமே விவரம் வெளியிட முடியும் —

இப்படி மன்னார் செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை — 54 பயணிகளுடன் சென்ற இந்த விமானத்தையும் பயணிகளையும் கண்டுபிடிக்க விமானப்படையும் கடற்படையும் தீவிரமான தேடுதல்களை மேற்கொண்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

"விமானம் காணாமற் போயுள்ள செய்தி கிடைத்தது முதல் அதைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணியில் வள்ளங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. எனினும் இன்னமும் அதனைத் தேடிக் கண்டு பிடிக்கமுடியவில்லை" என்று கடற்படையைச் சேர்ந்த லெப்டினன்ட் சரத் மொஹாத்தி கூறினார்.

கடற்படை அதிகாரிகள் தெரிவித்த தகவலில், கடற்படைப் படகுகள் மேற்குக் கரை ஓரப் பகுதிகளில் தேடுதல் பணிகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அதே சமயம் —

இந்த விமானம் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என்று இந்த விமான நிறுவன அதிகாரிகள் நம்புகின்றனர்.

"விமானம் பற்றிய எந்த விதமான தகவலும் கிடையாது என்பதால் அது கடத்தப்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது" என்று லயன் ஏயர் நிறுவன பணிப்பாளரான படி மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இந்த விமானத்தை யார் கடத்தியிருக்கக் கூடும் என்பது பற்றி அவர் எதுவும் கூறவில்லை.

இந்த விமானத்தில் இருந்த விமானப் பணியாளர்கள் உக்ரைன் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர் தெரிவித்தார் (இ-3-6-21-ரீ)


# JAFFNA TECHNICAL INSTITUTE

Regd No. (15251)

JAFFNA, SRI LANKA

## தொழிற் பயிற்சிகள்

✠ RADIO T. V. AND VIDEO DECK REPAIRING

சகல இன றேடியோ, ரெலிவிஷன், வீடியோ டெக் என்பன திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

(காலம் 09 மாதங்கள்)

✠ MOTOR REWINDING AND ELECTRICAL WIRING

சகல இன Motor, Fan, Transformer, றிவைண்டிங் செய்யப்படும் முறைகள், வீட்டு மின்சார வேலைகள், மின் உபகரணங்கள் திருத்தப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்.

(காலம் 06 மாதங்கள்)

✠ MOTOR BYCYCLE MECHANISM

மோட்டார் சைக்கிள் திருத்துதல், நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.

(காலம் 05 மாதங்கள்)

✠ AIR CONDITIONING

சகல இன குளிர்சாதனங்கள் திருத்துதல், Gas நிரப்புதல் என்பன பயிற்சியளிக்கப்படும்.

(காலம் 06 மாதங்கள்)

குறிப்பு:
1) பயிற்சி முடிவில் 06 மாத முழுநேர செய்முறைப் பயிற்சி அளிக்கப்படும்.
2) இத்துடன் இந்த ஆண்டுக்குரிய பயிற்சிகள் அனைத்தும் நிறுத்தப்படும்.

### புதிய பயிற்சிகள் ஆரம்பம்

05 - 10 - 1998 (கிழமை நாள்களில்)
10 - 10 - 1998 (சனி, ஞாயிறு நாள்களில்)

DIRECTOR

52/1, ஸ்ரான்லி வீதி,
(ரயில்வே கடவை அருகில்)
யாழ்ப்பாணம்.

(59554)


## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்)

பாறை)

★ லவனராஜன் (நடராசா கணேஸ் — மட்டக்களப்பு)

★ நிலதனு (சிவலிங்கம் புயலவன் — மட்டக்களப்பு)

★ மணிக்குமார் (பொன்னுத்துரை மகேந்திரன்— மட்டக்களப்பு)

★ ஸ்ரீவேந்தன் (கனகசபாபதி ஸ்ரீஸ்கந்தராசா — அம்பாறை)

★ மகரந்தன் (விஸ்வலிங்கம் ரவிகுலராஜா — மட்டக்களப்பு)

★ ஜனார்த்தன் (சிவலிங்கம் கேதீஸ்வரன் — மட்டக்களப்பு)

★ முனீஸ்வரன் (பூபாலப்பிள்ளை ரவீந்திரன் — மட்டக்களப்பு)

★ ஈஸ்வரகாந்தன் அல்லது காளியன் (பொன்னம்பலம் சிவரத்தினம் — பதுளை)

★ அழகுமதி அல்லது பூபதி (திருமால் சசிகலாதேவி — யாழ்ப்பாணம்)

★ அழகுநிலா அல்லது இதயா (கஜேந்தினி சிவலிங்கம் — யாழ்ப்பாணம்)

★ அருந்ததி (இராமநாதபிள்ளை திலகேஸ்வரி— மாங்குளம்)

★ விஸ்வநாதன் (வடிவேலு மோகன் — மட்டக்களப்பு)

★ துளஸ்தகாந்தன் (மயில்வாகனம் ரவி — மட்டக்களப்பு)

★ மலையூரான் (நாகராசா முருகமூர்த்தி — அம்பாறை)

★ பானுகாந்தன் (குமாரசாமி புவனேசகுமார் — மட்டக்களப்பு)

★ தைன் (சிவலிங்கம் — தங்கமயில் —மட்டக்களப்பு)

★ நீகவரன் (நவரத்தினம் நிமாலநந்தன் — மட்டக்களப்பு)

★ வீரத்தேவன் (தணிகாசலம் தங்காகரன் —மட்டக்களப்பு)

★ வருணவேளன் (வேதாரண்யம் ஜெயகோபால்—மட்டக்களப்பு)

★ காவல்விழியான் (றதிகரன் கண்ணன் — மட்டக்களப்பு)

★ ஈகல்மதி (சின்னத்தம்பி திலகவதி — யாழ்ப்பாணம்)

★ கவியா (இராமச்சந்திரன் சந்திரகுமார் — கொழும்பு)

★ அரசி (வேலாயுதபிள்ளை ஜீவதி — யாழ்ப்பாணம்)

★ இசையமுது (நவரத்தினம் நளாயினி — யாழ்ப்பாணம்)

★ தமிழ்முதல்வன் அல்லது காந்தராஜ் (சங்கரப்பிள்ளை சுரேந்திரன் — மட்டக்களப்பு)

★ உதயராணி (கந்தசாமி ராஜினி — யாழ்ப்பாணம்)

★ வேல்விழி (விக்னேஸ்வரமூர்த்தி ஜமுனா — யாழ்ப்பாணம்)

★ வைகைஅரசி (நாகரத்தினம் கமலாவதி — யாழ்ப்பாணம்)

★ சுடர்மணி (வடிவேல் நகுலராஜ் —அம்பாறை)

★ குருதேவன் (வீரசிங்கம் விநாயகமூர்த்தி — மட்டக்களப்பு) (இ-ரீ)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01- 10- 1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org